Registered as a News Paper பக்கங்கள் 12 விலை: ரூ. 6/-

DMC

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

## 30 லட்சம் பேருக்கு 12 மாதங்களில் எயிட்ஸ்

ஆசியாவில் எயிட்ஸ் நோய் பரவி வரும் தற்போதைய போக்கில் மாற்றம் ஏற்படாது விட்டால் 2000 ஆண்டளவில் சுமார் 1 கோடி மக்கள இதனால் பாதிக்கப்படுவர் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. உண்மை நிலையை உணர்ந்து எயிட்ஸ் நோயை ஒழிப்பதற்கு தேசிய முக்கியத்துவம் வழங்கும்படி உலக சுகாதார ஸ்தாபனம் ஆசிய (11ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 24 09-09-94 வெள்ளிக்கிழமை ஓசை 203

## இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு

# அடுத்த கட்ட நடவடிக்கைக்கு சந்திரிகாவிற்கு அங்கீகாரம்

## ஐவர் கொண்ட குழுவும் நியமனம்

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைக்கு சிறிலங்கா அமைச்சரவை பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க.விற்கு அங்கீகாரம் அளித்துள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று தெரிவித்தார்.**

இதேவேளை இனப்பிரச்சினைத் தீர்விற்கான ஒரு நடவடிக்கையாக பிரதமா தலைமையில் ஐவர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் யுத்த நிறுத்தத்திற்கும் இணக்கம் தெரிவித்து அனுப்பி வைத்த கடிதத்திற்குப் பதிலளிப்பதற்கான நடவடிக்கையை பிரதமர் சந்திரிகா எடுத்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிபந்தனையற்ற விதத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்படல் வேண்டும் என தலைவர் பிரபாகரன் தெரிவித்திருப்பதை அரசாங்கம் முழுமையாக ஏற்றுக்கொள்கிறது என்றும் அதற்கு தாம் தயார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதமர் (11ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு குறித்த அமைச்சரவைதீர்மானங்கள்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களை புனர் நிர்மாணம் செய்வதற்கு சிறிலங்கா பிரதமர் சந்திரிகா தலைமையில் அமைச்சரவை உபகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரி (11ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கித் தாக்குதலால் குடியிருப்புகள் சேதம்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் உள்ள கரையோரக் குடியிருப்புகள் மீது கடற்படையினர் மேற்கொண்ட கடும் பீரங்கி கலிபர் தாக்குதல்களுக்கு இலக்காகி பல வீடுகள் சேதமடைந்தன.

தொண்டமானாறு முதல் முனை வரையில் உள்ள குடியிருப்புகளை இலக்குவைத்து (11ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல்போன மீனவர் சடலங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை பூநகரி கல்முனை கடற்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலின்போது காணாமற் போன இரு மீனவர்களது சடலங்களும் நேற்று குருநகர் (11ஆம் பக்கம் பார்க்க)

## சுகாதார அமைச்சர் யாழ். வர விருப்பம்

(கொழும்பு)

வடபகுதி வைத்தியசாலைகளின் நிலையை அறிவதற்காக விரைவில் யாழ்ப்பாணம் வரவிருப்பதாக சுகாதார, சமூக சேவைகள் அமைச்சர் ஏ. எம். எம். பௌசி தெரிவித்துள்ளார்

இதற்காக சர்வதேச செஞ் (11ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் படுகொலைகள் குறித்த விசாரணைக்குழு அமைக்க ஜனாதிபதி டி.பி. மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற அரசியல் படுகொலைகள், காணாமல் போனோர் குறித்து விசாரணை நடத்த புதிய குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என சந்திரிகா அரசு விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மறுத்துவிட்டார் என நீதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் (11ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு மக்களுக்கு தனிப்பட்ட நிர்வாகப் பிரிவு அவசியம்

\- வாசுதேவநாணயக்காரா

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மக்களுக்கு என ஒரு தனிப்பட்ட நிர்வாக பிரிவை ஏற்படுத்திக் கொடுப்பதைபொதுஜன ஐக்கிய முன்னணி தனது பிரதான நோக்கமாக கொள்ள வேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரா தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் வடக்கு - கிழக்கை ஒரு பிரதேசமாக அமைப்பதன் மூலமே அப்பகுதியில் வாழும் தமிழ்-முஸ்லிம் மக்களின் இன விகிதாசாரத்தை உறுதி செய்ய முடியும் என்றும் பிழையான நோக்கங்களை கொண்ட குடியேற்றத் திட்டங்களை தடுக்க முடியும் என்றும் இதே அடிப்படையில் இப்பகுதியின் நிர்வாகம் ஒரே அலகின் கீழ் கொண்டுவர முடியும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு தீர்வைக் காண முற்படும் புதிய அரசாங்கம் இவற்றை கருத்தில் கொண்டு இதய சுத்தியுடன் நடந்து கொண்டால் மட்டுமே வடக்கு - கிழக்கு பிரச்சினையை (11ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



கப்டன் கதிரவன்

(ஜோக்கின்)

யாழ் மாவட்டத்தில் கடந்த நான்காம் திகதியன்று சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற திடீர் மோதலின்போது விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த தீவகக் கோட்ட துணைப்பொறுப்பாளர் கப்டன் கதிரவன்/ஜோக்கின் (ஜேசுதாசன் பிறேமன் இருதய குமார், 5-ம் வட்டாரம் எழுவைதீவு. தற்போதைய முகவரி இல. 68, பழைய பூங்காவீதி, சொய்யாத்தோட்டம்) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## காவலரண்கள் மீது தாக்குதல் சிப்பாய் பலி; ஆயுதங்கள் மீட்பு

நெடுங்கேணிப் பிரதேசம் பதவியா குளக் கட்டுப் பகுதியில் இருந்த இரு இராணுவக் காவலரண்கள் மீது கடந்த ஆறாம் திகதி இரவு 11.55 மணியளவில் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் பலியானார். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடி விட்டனர். ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

குளக்கட்டின் கலிங்குப் பகுதிக்கு காவலிலிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

இத்தாக்குதலின் போது

- ★ ரி-56-1 ரகத் துப்பாக்கிகள் - 02
- ★ அதற்குரிய ரவைக் கூடுகள் - 09
- ★ கோள்சர் - 04
- ★ நடுத்தர ரவைகள் - 916
- ★ ஜேஆர் கைக்குண்டு - 09
- ★ பைனாகுளர் - 01
- ★ கிளைமோர் வெடிக்க வைக்கும் சாதனம் - 01
- ★ மழைக் கவசம் - 02
- ★ தலைக் கவசம் - 04
- ★ தண்ணீர் கான் - 02
- ★ தண்ணீர்க் கான் கோள்சர் - 04
- ★ கிற் பாக் - 06
- ★ சப்பாத்து (சோடி) - 03

என்பன கைப்பற்றப்பட்டன.

## வரி விளம்பரம்

### ஆண்டு 4

ஆண்டு 4ற்கு புலமைப் பரிசில் (1995) மாதிரி வினாத்தாள் 11 - 9 - 1994 ஞாயிறு வெளியிடப்படும். தேவையானோர் பெற்றுக் கொள்ளலாம், ஆண்டு 4 நாளாந்த, சனி, ஞாயிறு (weekend classes) வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன, புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (9342)

### நினைத்தாலே இனிக்கும்

மணலாறு கச்சான் அல்வா சுத்தமானது, சுவையானது. அனைவரும் விரும்பிச் சுவைப்பது. உற்பத்தியாளர்; பாரதி சிறுகைத்தொழில் நிறுவனம், சம்பியன்லேன் கொக்குவில் எல்லா இனிப்பு வியாபாரிகளிடமும் பெற்றுக் கொள்ளலாம். (9327)

### தவறிவிட்டது

4-9-94 அன்று கிளாலிக் கரையில் அலோசியஸ் ஜெசிந்தா (645753350 V) அலஸ்ரின் திரேசம்மா (406042359 V) தாசியஸ் மரியராணி (496530780 V) ஆகியோரின் அடையாள அட்டைகளும் வடபகுதிக்கு வெளியே செல்லும் அனுமதிப் பத்திரமும் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (9339)


# நினைவு கூருகின்றோம்...

## 09-09-1994

1984-ம் ஆண்டு இதேதினத்தில் காரைநகர், பொன்னாலைப் பகுதியில் இனங்காணப்படாது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் எமைப்பிரிந்த.

★ **ஜெகன் - நிசாம்** (நடராசா ஜெகதீசன் - சங்கரத்தை, வட்டுக்கோட்டை-யாழ்)

1985-ம் ஆண்டு மட்டுநகர்-புகையிரதநிலையவீதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**பிரதீஸ்** (சின்னத்துரை ரகு-ஆரையம்பதி-மட்டு)

**பிரியன்** (தம்பிப்பிள்ளை நவரட்ணராஜா - ஆரையம்பதி-03-மட்டு)

மட்டு-சத்துருக்கொண்டான் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஜோன்** (ராஜு ஜோன் கெனடி-இருதயபுரம் மட்டு)

**பெரியபேணாட்** (குருசுமுத்து துரைசிங்கம்-நாகர் கோவில் மேற்கு -வடமராட்சி கிழக்கு)

1987-ம் ஆண்டு அம்பாறை - தாண்டியடிப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த.

**கிருபா** (பொன்னையா சிறிதரன்-அக்கரைப்பற்று 08-அம்பாறை)

1989-ம் ஆண்டு வவுனியா-அனந்தர்புளியங்குளம் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சுதன்** (வேலாயுதம் சுரேந்திரன்-சேமமடு, ஓமந்தை-வவுனியா)

**மணியம்** (சின்னையா தேவதாசன்-புதுக்குளம், ஓமந்தை-வவுனியா)

1990-ம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்திற்கெதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாகப் பொறிவெடி விபத்தில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஜெயபால்** (முத்துலிங்கம் சுகு-ஐயங்கேணி, ஏறாவூர் -மட்டு)

1991-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம லெப். காயத்திரி** (இந்திராதேவி இரத்தினம் -7-ம் குறிச்சி, அக்கரைப்பற்று - அம்பாறை)

**சாந்தினி** (ஜெயசோதி நாகலிங்கம் - தம்பிலுவில் -அம்பாறை)

**லெப். அரசன்** (செல்லத்தம்பி பரமேஸ்வரன்-கிண்ணியடி, வாழைச்சேனை- மட்டு)

**2-ம் லெப். மலைமகள்** (வளர்மதி பிள்ளையான் -பாடசாலை வீதி, கிரான்-மட்டு)

**செல்வரூபி** (காளியம்மா பொன்னையா - பன்குடாவெளி ,மட்டு)

**கப்டன் கலையரசன் - மிதுலன்** (குமாரசிங்கம் குணரஞ்சன் - செக்கடிப்புலவு - வவுனியா)

**ஜொய்சி** (வாசுகி காளிமுத்து-7-ம் வாய்க்கால் கிளிநொச்சி)

**மேஜர் தண்டேஷ்** (கனகநாயகம் குணேந்திர மோகன் ஒடக்கரை-பருத்தித்துறை)

**2 ம் லெப். சேரன்** (இராசரத்தினம் ஜெயராஜ்-கும்பழாவளை, அளவெட்டி-யாழ்)

**2-ம் லெப். நேசன்** (சிவனேசன் சிவசங்கர் மானிப்பாய் மேற்கு -யாழ்)

**பிரவீனா** (யசோதாதேவி செல்வநாயகம்-முகமாலை, எழுதுமட்டுவாள் - யாழ்)

**திலீப்** (மார்க்கண்டு இளங்கீதன் - ஆவரங்கால், புத்தூர் - யாழ்)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஏற்பட்ட சமரில் வீரச் சாவெய்திய -

**லெப். அருட்செல்வன்/பூட்டோ** (சறுட்டையா சிவலோகநாதன்- கற்குளம்-வவுனியா)

**லெப். வேங்கை/ராம்ராஜ்** (மயில்வாகனம் தமிழ்ச்செல்வன் - பாவற்குளம் - வவுனியா)

1992 ஆம் ஆண்டு திருமலை - குரங்குப்பாலம் சிறிலங்கா இராணுவ முகாமிற்கும், பாலம்போட்டாறு சிறிலங்கா இராணுவ முகாமிற்குமிடையில் அமைந்திருந்த காவலரண்கள் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் நந்தன்** (வெள்ளைச்சாமி சுரேஸ்குமார் - சீனன்குடா - திருமலை)

**லெப். வளவர்க்கோன்-நிருபன்** (கந்தசாமி திருக்கேதீஸ்வரன் - ஆலங்கேணி - திருமலை)

**2-ம் லெப்.சூலாமணி -சயபத்** (சுப்பிரமணியம் விக்னேஸ்வரன் - நானாட்டான் - மன்னார்)

1993 ஆம் ஆண்டு மன்னார்- பூநகரிவாடியடிச்சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப்.செல்வன் -அனந்தன்** (முருகேசபிள்ளை சரவணபவன் - சீனியர்லேன், கலட்டி -யாழ்)

**லெப். சிவம்** (சின்னையா கமலேஸ்வரன் - கோப்பாய் வடக்கு, வளலாய் - அச்சுவேலி)

**2-ம் லெப்.பனய்பாரன்** (தங்கராசா சதீஸ்வரன்- இல. 9/7, அன்னசத்திர லேன்-கந்தர்மடம்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும், சிறிலங்காப் படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்,

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10293)





**"ஹரி ஓம்"**

மில்க்வைற் அபிமானிகளே, மில்க்வைற் விற்பனை வாகனம் வல்லிபுரக் கோவில் தேர்உற்சவத்தின் போது உங்களுக்கு அன்பளிப்புகள் வழங்க உள்ளது மில்க்வைற் உற்பத்தி மேலுறைகள் / வெற்றுப்பக்கற்றுகள் இன்றே சேகரியுங்கள். "மில்க்வைற்"

(சி- 10296)


**யாழ்: மாவட்டத்திலுள்ள சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்கும், ஓடியோ நாடா விநியோகஸ்தர்களுக்கும், தொழில்நுட்ப சேவையாளர்களுக்கும் (ரீவி-டெக்- ஜெனரேற்றர் தொழில் செய்வோர்)**

இத்துறை சார்ந்தோருக்கான முக்கிய கலந்துரையாடல் 10 - 9 - 94 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கோண்டாவில், யாழ் மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் உள்ள திலீபன் மண்டபத்தில் நடைபெற இருப்பதால் இத்துறையினரை தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்?

செயலாளர்

கலை ஊடக இணையம்

(சி-10298)


உ

# திறப்பு விழா அழைப்பிதழ்

நிகழும் பவ வருடம் ஆவணி மாதம் 25-ம் திகதி [10-09-94] சனிக்கிழமை காலை 6.05 - 8.55 மணியளவில் வரும் சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்

# விக்னேஸ்வரா பல்பொருள் வாணிபம்

என்னும் வாணிப நிலையத்தை திறக்கவிருப்பதால் அத்தருணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பேருந்து நிலையம்,
நெல்லியடி,
கரவெட்டி.

இங்ஙனம்
ந: விக்னராஜா
உரிமையாளர்

(சி-10294)

## 3-ம் ஆண்டின் உதயம்

09 - 09 - 1994

மூன்றாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் தமிழ் நிலா நகைமாட நிறுவனத்தினர் தமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு நன்றி கூறுவதோடு தமது 2-ம் ஆண்டின் நிறைவினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

# தமிழ் நிலா நகை மாடம்

பேருந்து நிலையம்,
நெல்லியடி கரவெட்டி.

குறிப்பு:- தமிழ் நிலாவின் அன்பளிப்பு நாளை உங்கள் கையில்......

(சி-10299)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# சந்திரிகாவும் - இனப்பிரச்சினைத் தீர்வும்; பேரினவாதம் எவ்வளவு தூரம் அனுமதிக்கும்

கடந்த மாதம் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அடைந்த தோல்வியானது பௌத்த பேரினவாதம் சிறிலங்கா அரசியலில் புறம் தள்ளப்பட்டு விட்டதிற்கான அடையாளமா? என்ற கேள்விக்கு இன்று பதில் காண வேண்டியதொரு அவசிய நிலை ஏற்படுள்ளதெனலாம். ஏனெனில் இனப்பிரச்சினைத் தீர்விற்கு இதற்கான பதில் அவசியம் ஆகும்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி முன்னர் எப்பொழுதும் இல்லாதவாறு பௌத்த பேரினவாதத்திற்கு தலைமை தாங்க முற்பட்டிருந்தது என்பது வெளிப்படையான தொன்றே. தான் பதவி ஏற்றதில் இருந்து பௌத்த சிங்கள தலைவனாகவே தன்னை இனங்காட்டிக் கொண்ட ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தீவிர பௌத்த அடிப்படைவாத அமைப்புக்களையும் தன்னுடன் இணைத்துக் கொண்டார்.

இந்தவகையில் காமினி ஜெயசூரியா போன்றோரின் சிங்கள பௌத்த பாதுகாப்புச் சபை என்பனவற்றுடன் கூட்டுச் சேர்ந்ததோடு, எதிர்க்கட்சியில் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த தீவிர பௌத்த சிங்கள பேரினவாதிகளையும் - ஹெல உறுமய குழுவினர் - தனது அணியில் சேர்த்துக் கொண்டார்.

இந்நிலையில்தேர்தலில்ஐக்கியதேசிய கட்சியினருக்குக் கிடைத்த தோல்வி பௌத்த சிங்களப் பேரினவாதிகளுக்கு விழுந்த அடிதான் என்றாலும், ஐ. தே. கவின் தோல்வியானது பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு அது தலைமை தாங்க முற்பட்டதினால் தான் விளைந்தது எனக் கருத்துக் கொள்வது தவறு என்றே கூறமுடியும்.

ஏனெனில். இம்முறை ஐ. தே. க சந்தித்த தோல்வியானது, அதன் 17 வருட ஆட்சியில் சிங்கள மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகவும், மக்கள் மாற்றத்தை விரும்பியதன் காரணமாகவுமே நிகழ்ந்ததாகும் மேலும் பௌத்த பேரினவாதத்திற்கு டி. பி. விஜேதுங்கா தலைமை தாங்க முற்பட்டாலும், அவர் பின்னால் முழுமையாகப் பௌத்த பேரினவாதம் அணிதிரண்டதா என்றாலும் இல்லை என்றே கூற முடியும்.

எடுத்துக்காட்டாக, கடந்த தேர்தலின் போது பௌத்த பீடங்களில் முக்கிய பீடங்களில் ஒன்றான மல்வத்தபீடம்மறைமுகமாகஐதேகவைச் சார்ந்து நின்றதை அவதானிக்கக் கூடியதாக இருப்பினும், அஸ்கிரிய பீடமானது பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சார்ந்து நின்றதையும் அவதானிக்க கூடியதாகவே இருந்தது. அத்தோடு பொதுஜன ஐக்கிய முன்னணியும் அஸ்கிரிய பீடத்துடன் எழுந்த சில கருத்து பேதங்களைத் தீர்த்துவைப்பதிலும் தீவிர அக்கறை காட்டியதையும் சுட்டிக் காட்ட முடியும்.

இந்த வகையில் இத்தேர்தலில், பௌத்த-சிங்களப் பேரினவாதத்தின் பெரும்பாலான சக்திகள் ஐ. தே. கவை சார்ந்து நின்றிருப்பினும், அவை பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து முற்றாகக்களையப்பட்டதொன்றாகவோ அன்றித்தேர்தலில் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டதொன்றாகவோ கருதி விட முடியாது

ஆனால் ஐ. தே. கவின் தேர்தல் தோல்வியானது பௌத்த பேரினவாதத்திற்கு சற்று மனச் சோர்வை ஏற்படுத்தியுள்ளதோடு, சற்றுக் குழப்ப நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. என்பதே யதார்த்த நிலையாகும். இச் சோர்வில் இருந்து இப் பௌத்த பேரினவாத சக்திகள் எப்பொழுது விடுபடும்? பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் உள்ள பௌத்த பேரினவாத சக்திகளை பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவை எந்தளவிற்குக் கட்டுப்பாட்டிற்குள்வைத்துக்கொள்ள முடியும்? என்பதே எதிர்காலத்தில் இனப்பிரச்சினையில் சந்திரிகா குமாரணதுங்காவின் அரசியல் நிலைப்பாட்டையும், நடவடிக்கைகளையும் தீர்மானிக்கக் கூடியவை யாகும்.

## நல்லெண்ண சமிக்கை

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவின் அரசாங்கம் பதவி ஏற்று மூன்று வார காலத்திற்குள் இனப்பிரச்சினை விவகாரத்தில் சில நல்லெண்ண சமிக்கைகளை வெளிப்படுத்தியுள்ளார் என்பதில் சந்தேகமில்லை. இதில் முக்கியமாக தடை செய்யப்பட்ட 28 பொருள்கள் மீதான தடை நீக்கம் ஓரளவு திருப்திகரமான நற்சமிக்கையாகும்.

யாழ். குடாநாட்டிற்கான போக்குவரத்துப் பாதை திறத்தல், மின்சார விநியோகம், யுத்த நிறுத்தம் பற்றிய ஆலோசனை என்பன குறித்து அரசாங்கத் தரப்பு ஆலோசிப்பதாக வெளிவரும் அறிவிப்புக்களும் முன்னேற்றகரமானவை. ஆனாலும் அவை இன்னமும் அமுல்படுத்தப்படும் விடயங்களாக உருப்பெறவில்லை.

இருப்பினும் பொதுஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு தமிழ்மக்கள் தரப்பில் இருந்து வரவேற்பு கிடைத்துள்ளது. பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா இவ்விடயத்தில் கணிசமான தூரம் முன்னேறுவார் என்னும் எதிர்பார்ப்பும் உள்ளது.

இந் நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி, இனப்பிரச்சினை விடயத்தில் முக்கியமான விடயங்கள் யாவும் ஜனாதிபதித் தேர்தலின் பின்பே மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளது. அதாவது, இனப்பிரச்சினைத் தீர்விற்கான அரசாங்கத்தின் யோசனை மற்றும், பேச்சுவார்த்தைகள் என்பன ஜனாதிபதித் தேர்தலின் பின்பே முன்வைக்கப்படும் / தொடங்கப்படும் என்பதே அதுவாகும்.

இந்நிலையானது, ஒருவகையில் நிறைவேற்று அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரே தீர்மானங்கள் மேற்கொள்வதற்கு தடங்கல்கள் எழ மாட்டாது என்ற காரணத்தின் அடிப்படையிலானதாக இருக்கலாம். ஆனால் இதற்கும் மேலாக, ஜனாதிபதித் தேர்தலின் முன் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வை முன்வைப்பதன் மூலம் பௌத்த பேரினவாத சக்திகளை கிளறிவிட அவர்கள் விரும்பாமையும் காரணமாக இருக்கலாம். இதுவே முக்கியமானது எனக் கருதவும் இடமுண்டு.

இவ்வாறு கருதுவதற்கு ஆதாரங்கள் இல்லாமலும் இல்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைக்காத அரசாங்கத்தரப்பு 'ஒற்றையாட்சி அமைப்பிற்கு ஒருசிறிது தானும் அப்பால் செல்லமாட்டோம், என இராணுவத்திற்கு உறுதி அளித்துள்ளதைச்சுட்டிக்காட்டலாம். இது இராணுவத்தினருக்கு முன்னால் அளிக்கப்பட்ட உறுதிமொழியாயினும், இதனை பௌத்த பேரினவாதிகளுக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழி என்று எடுத்துக்கொள்வதிலும் தவறில்லை.

இவ்வாறாக பொதுஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினைத் தீர்விற்கு தனது எல்லையை வகுத்துக் கொண்டாலும், அதன் தீர்வுத்திட்டம் வெளிவரும்வரை பௌத்த பேரினவாதம் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தாமல் இருப்பதில் ஆச்சரியம் கொள்வதற்கு எதுவுமில்லை

## ஒப்பந்தங்களும் பேரினவாதமும்

கடந்த காலத்தில் இனப்பிரச்சினை தொடர்பாக சிங்கள அரசியல்வாதிகளுடன் தமிழ் தரப்பினர் 18 உடன்பாடுகளைச் செய்து கொண்டுள்ளனர். இவ் உடன்பாடுகள் யாவும் செய்து கொள்ளப்படும்வரை பௌத்த சிங்களப் பேரினவாதம் எதிர்ப்புத் தெரிவித்த போதும் அமைதி காத்து வந்தது என்றே கூறமுடியும் ஆனால், ஒப்பந்தம் கைச்சாத்தான தின் பின்னர் அதாவது, உடன்பாடுகள் மூலம் தமிழர் உரிமைகள் வரையறை செய்யப்பட்ட பின்னர் சிங்களப் பேரினவாத சக்திகள் அமைதி காக்கவில்லை. சிங்கள அரசியல்வாதிகளும் அமைதிகாக்கவிடவில்லை.

இந்தவகையிலேயே18 உடன்பாடுகளும் இறுதியில் கைவிடப்பட்டன. இதில் முக்கியமான பண்டா-செல்வா உடன்பாடு, டட்லி - செல்வா உடன்பாடு உட்பட சகல உடன்பாடுகளுமே பௌத்த பேரினவாதிகளால் தோற்கடிக்கப்பட்டன.

இவ்வாறு தோற்கடிக்கப்பட்ட உடன்பாடுகளில் இறுதியானது இந்தியா-சிறிலங்கா சமாதான உடன்பாடாகும். இவ் உடன்பாட்டில் இலங்கைத் தமிழர் தரப்பு எவரும் கையொப்பம் இடாது விட்டாலும் தமிழர் பெயரில் இந்தியாவினால் செய்து கொள்ளப்பட்டதாகும். இவ்வுடன்பாடு கூட சிறிலங்கா அரசாங்கத்தால் நிறைவேற்றப்படவில்லை.

இவ்வுடன்பாடு நிறைவேற்றப்படாமைக்கு சிறிலங்கா அரசாங்கமே காரணம் என இவ்உடன்பாடு உருவாகக் காரணமாக இருந்தவரும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் எதிரான நிலைப்பாடுகொண்டவருமான முன்னாள்சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவர் டிக்சிற்றே இன்று ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதில், முக்கியமானவிடயமாகச் சுட்டிக்காட்டப்படவேண்டியது, இவ் ஒப்பந்தத்தை செய்து கொண்ட ஐ. தே. கட்சி அரசாங்கமே கட்சிக்குள் பௌத்த பேரினவாதம் கொடுத்த அழுத்தம் காரணமாகவும் ஒப்பந்தத்தைக்கைகழுவி விட்டதாகும்.

இவ்வாறான வரலாற்றுப்பாடத்தின் அடிப்படையில்தான், தற்பொழுதும் புதிய அரசாங்கம் மேற்கொள்ளப்போகும் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு குறித்த விடயத்தையும் நோக்க வேண்டியுள்ளது. இது பிரதமர் சந்திரிகா இனப்பிரச்சினைத் தீர்வில் பின்னடிக்க வேண்டி வரும் என்பதினையோ அன்றி அதில் நம்பிக்கை வைக்கக் கூடாது என்பதற்காகவோ கூறுவதாக இல்லை. பிரதமர் சந்திரிகா முன்னேற்றகரமான ஒரு தீர்வுத்திட்டத்தை அவர் முன்வைக்கிலும் அவர் எதிர் கொள்ளவேண்டி வரப் போகும் நெருக்கடிகளை முன்மொழிவதற்கான எதிர்வு கூறலே இதுவாகும்.

## ஐ. தே. கவின் எதிர்கால தலைமை

ஏனெனில், கடந்த காலத்தில், இருந்ததை விட சிங்கள அரசியற் தலைமை குறிப்பாக ஐ. தே. கவின் எதிர்கால அரசியற் தலைமை ஒரு பக்குவப்பட்ட அரசியற் தலைமை என்று கூறிவிடுவதற்குஆதாரமில்லை. மாறாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இனவாதத்தையோ அன்றி ஜனநாயக பண்புகளை மீறிய வழிமுறைகளையோ கடைப்பிடிப்பதற்கு அது தயங்கப் போவதில்லை என்பதற்கான ஆதாரங்களே உள்ளன.

எடுத்துக் காட்டாக, எதிர்க்கட்சித் தலைவரான காமினி திசாநாயக்கா, 1983ஆம் ஆண்டு நுவரெலியாவில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த கலவரத்தின் போது அதற்கு தலைமை தாங்கியமையையும் கடந்த மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் ஐ தே க. தோல்வி உற்றபோதும் ஆட்சியைக் கைப்பற்ற அவர் மேற்கொண்ட முயற்சிகளையும் சுட்டிக் காட்டலாம்.

அத்தோடு, பொதுஜன ஐக்கிய முன்னணிக்குச் சந்திரிகா குமாரணதுங்கா பலமானதொரு தலைமையை வழங்கினாலும், அதனுள் பௌத்த பேரினவாத சக்திகள் முற்றுமுழுதாக இல்லாது போய்விட்டதாகவும் இல்லை. குறிப்பாக முன்னர் சுதந்திரக் கட்சிக்குள் இருந்த ஹெலவுறுமய குழுவினரில் ஒரு பகுதியினர் அநுரா பண்டாரநாயக்காவின் வெளியேற்றத்துடன் வெளியேறிவிட்டாலும், அவர்களின்பலம் கட்சிக்குள்முற்றுமுழுதாக அழிந்து போய்விட்டதாக இல்லை; அத்தோடு அஸ்கிரிய பீடத்தின் செல்வாக்கும் கட்சிக்குள் இருப்பதாகத் தெரிகின்றது. இந்நிலையில் பௌத்த பேரினவாத சக்திகள் கட்சிக்குள் தமது எதிர்ப்பை காட்டவும் தவறப் போவதில்லை.

இதேசமயம், பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா அமைத்துள்ள அமைச்சரவையானது இதுவரையில், சிறிலங்கா அரசில் அமைக்கப்பட்ட தகைமைவாய்ந்த அமைச்சரவை எனக் கூறப்பட்டாலும் அவ் அமைச்சரவையிலும் பெரும்பலவீனமும் இல்லாமல் இல்லை. அவற்றில் முக்கியமானதில்: ஒன்று பலகட்சி அமைச்சரவை, இரண்டு தனித்துவமான துறைசார்ந்த ஆளுமை கொண்ட ஆனால் பெரும் அரசியல் தளமற்றவர்களைக் கொண்ட அமைச்சரவை என்பதாகும்.

அதாவது சிறுகட்சிகள், மற்றும் சிறுபான்மைக்கட்சிகளின் கூட்டினாலும், அரசியற்தளமற்ற அமைச்சரவையினாலும் பௌத்த பேரினவாதத்திடம் இருந்து பெரும் எதிர்ப்பு கிளம்பும்போது சாமாளிக்க முடியுமா? என்பதே முக்கிய கேள்வியாகும்.

இவ்வாறானதொரு கேள்வியுடன் தான் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா முன்வைக்கப் போகும் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வை தமிழ்மக்கள் எதிர்பார்க்க வேண்டியுள்ளது. ஆனால், இதில் இனப்பிரச்சினை தீர்விற்கான ஒத்துழைப்பைத் தமிழ்மக்கள் வழங்கமுடியுமே ஒழிய தமிழ் மக்களினால் எதுவும் செய்ய முடியாது. இந் நிலையில் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா பௌத்த பேரினவாதத்தை எப்படி எதிர்கொள்வார் என்பதிலேயே இனப் பிரச்சினை தீர்வும் தங்கியுள்ளது. இதில், அவர் எதிர்த்து நிற்பாரா? பணிந்து போவாரா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். சந்திரிகா இதில் பணிந்து போகாது விடுவாரேயானால் அது இலங்கை வரலாற்றில் புதிய அத்தியாயங்களைப் படைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஜெயராஜ்

# பம்பாய் குண்டு வெடிப்புக்களும் சி. பி. ஐ யின் புலனாய்வும்

இந்தியாவை உலுக்கிய பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவங்கள்முடிந்து, இவ்வாரத்துடன் 18 மாதங்கள் பூர்த்தியாகி விட்டன. அறுநூறுக்கும் மேற்பட்ட புலனாய்வாளர்கள் இன்ரபோல் என பலதரப்பட்ட முயற்சிகள் பிரதான சந்தேக நபரெனக் கருதப்படும் யாகூப் மெமனின் கைது வரை தொடர்ந்துள்ளன.

பம்பாய் குண்டு வெடிப்பின் ஆரம்ப விசாரணைகள் முதல் யாகூப் மெமனின் கைதுவரை சி பி. ஐ. ஒவ்வொரு கட்டத்திலும் தட்டுத் தடுமாறி அதிர்ஷ்டத்தின் துணைகொண்டே விசாரணைகளில் முன்னேற்றம் கண்டுவருகிறது. குற்றவாளிகள், கவலையீனமாகவிட்ட தடயங்கள், சி. பி. ஐ யின் கைகளில் சிக்கியதும் சிக்கலின் முடிச்சை அவிழ்ப்பதில் பெரிதும் உதவியிருக்கிறது.

கடந்த ஆண்டு 12-ந் திகதி குண்டு வெடுப்புக்கள் நடந்த உடனேயே பல கோணத்திலும் சந்தேகங்களை சி.பி ஐ. கொண்டது. காஷ்மீர் பிரிவினைவாதிகளா, பஞ்சாப் தீவிரவாதிகளா, அசாமின் உல்பாவா அல்லது பம்பாய் குண்டர்களின் கோஷ்டி மோதலா எனத் திணறிக்கொண்டிருந்த புலனாய்வுத் துறைக்கு, மூன்று வகைகளில் தடயங்கள் கிடைத்தன.

பம்பாயின் தெருவொன்றில், துப்பாக்கிகளுடனும், வெடிமருந்துகளுடனும் காணப்பட்ட மாருதி வான், குண்டு வெடித்த இடங்களில் ஒன்றான எயர் இண்டியா அலுவலகத்தில் குண்டு வைக்கப்பட்டிருந்ததாக கருதப்பட்ட காரொன்றின் அடிச்சட்ட எண்கள், பம்பாயின் புறநகர்ப் பகுதியொன்றில் குண்டுகளுடன் கண்டிபிடிக்கப்பட்ட ஸ்கூட்டர் ஒன்று என்பன தடயங்களாக சிக்கின.

இவற்றில், இம்மூன்று வாகனங்களதும் உரிமையாளர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததும் புலனாய்வை எளிதாக்கியது. இதன் படி யாகூப் மெமன், டைகர் மெமன் என்னும் சகோதரர்களுக்கு வலை வீசப்பட்டது.

12-ந் திகதி குண்டு வெடிப்புக்கள் நடைபெறும் முன்பே இச்சகோதரர்களும், அவர்களது குடும்பத்தவர்களுமாக பன்னிரண்டு பேரும் இந்தியாவை விட்டு தப்பியோடிய விடயம் தாமதமாகவே சி.பி. ஐக்குகிடைத்தது. இவர்களை கண்டறியும் பணியில் வெளிநாடுகளிலுள்ள தனது புலனாய்வாளர்களை முடுக்கி விட்டது சி. பி. ஐ.

ஒருபுறம் மெமன் சகோதரர்களின் தேடல் நடைபெற மறுபுறமான விசாரணைகளிலிருந்து தாவூத் இப்ராகிம் என்ற பிரபலம் மிக்க கடத்தல் மன்னனையும் சந்தேகித்தது சி. பி. ஐ. குண்டுகளின் சக்தி, நிச்சயமாக வெளியிலிருந்த பின்னணியொன்றையும் உறுதியாக்கியது.

இந்திய அரசினால் முன்பே தேடப்பட்டிருந்த தாவூத் இப்ராஹிம், இவ்வாறான சக்திவாய்ந்த வெடிமருந்தினை இந்தியாவுக்குள் கொண்டுவருவதற்கு உதவியிருப்பாரென்ற தகவல் விசாரணைகளின்போதே வெளிவந்தது.

இதனையடுத்து, தாவூத் இப்ராஹிமும் தேடப்படும் நபரானார். தப்பியோடிய மெமன் சகோதரர்களின் சரணாலயமாக துபாயே இருக்கும்என சி.பி.ஐ கணக்கிட்டது ஏனெனில், துபாயின் கடத்தல் கூட்டங்களுக்கு வழிகாட்டும் ஏஜன்டாக தொழிற்பட்ட டைகர் மெமனின் மேல் 85-ம் ஆண்டளவில் சுங்கத் துறையினரால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது இதன் மூலம் டைகரும் அவரது குடும்பத்தவர்களின் செல்லிடமாக துபாய் இருக்கும் என நம்பப்பட்டது.

இதற்கேற்ப, துபாயில் மெமன் சகோதரர்களை சி.பி ஐ தேடிக் கொண்டிருக்கும் போதே, அவர்கள் பத்திரமாக பாகிஸ்தானுக்குள் நுழைந்து விட்டார்கள் இதுவும் வெகு தாமதத்துக்குப் பின்பே சி.பி ஐக்குத் தெரிய வந்தது.

தெரிய வந்தபின்னும், கண்ணுக்கு முன்னே தேடப்படும் நபரை வைத்துக் கொண்டு, பாகிஸ்தான் உளவுத் துறையான ஐ எஸ்.ஐ யும், பாகிஸ்தானின் நவாஸ் ஷெரீப் அரசும் நன்றாக சி.பி.ஐ யை ஏய்த்துக்காட்டின. மெமன் குடும்பத்தாரை பிடிக்க இதுவரை கண்டிராத மனித வேட்டை நடத்த, தான் உத்தரவிட்டிருப்பதாக நவாஸ் ஷெரீப், இந்தியப் பிரதமர் நரசிம்மராவிடம் தெரிவித்திருந்தார் மெமன் குடும்பத்தினர் பாகிஸ்தானுக்குள் வந்திருக்கலாம் ஆனால் சொந்தப் பெயர்களில் வந்திருப்பார்கள் என்பதற்கில்லை என இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதுவர் ரியாஸ் ஹுசேன் கூறியிருந்தார்.

இவர்கள் இப்படி கூறிக் கொண்டிருக்கும்போதே கராச்சியில், 1.16 கோடி ரூபா செலவில் மிகப் பாதுகாப்பான வகையில் அரண்மனை போன்ற வீட்டில் ஐ. எஸ். ஐ மெமன் குடும்பத்தாரை

(10ஆம் பக்கம் பார்க்க)

ரகுராம்

# கடலில் மூழ்கும் அபாயமிருந்தும் சூழல் பாதுகாப்பைப் பேணும் மாலைதீவு

வெப்பத்தினால், உலகின் கடல் மட்டம் அதிகரித்து வருவதையடுத்து, சுமார் 50 வருடங்களுக்குள் மாலைதீவு பூமியின் மேற்பரப்பிலிருந்து மறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகெங்கும் புதை படிவங்கள் எரிக்கப்படுவதாலும், காடழிப்பினாலும் வளிமண்டலத்தின் கரியமில வாயுச் சேர்க்கை அதிகரிப்பதால் ஏற்படும் பச்சை இல்லத் தாக்கம் குறித்து தன்னால் அதிகம் செய்யமுடியாது என பவளத்தீவான மாலைதீவு அரசாங்கத்திற்கு தெரியும்.

ஆனால் அலைகளின் கீழ் அமிழ்ந்து விடாமல், மாலைதீவு அபிவிருத்தியை சூழல் பாதுகாப்புடன் அணைத்து தன்னால் இயன்றதை செய்ய முயன்று வரும் ஒரு நாடாக மாலைதீவு மாறியுள்ளது.

200,000 மக்கள் தொகையைக் கொண்டுள்ள மாலைதீவு ஜீவனாதாரத்திற்கு பிரதானமாக கடற்தொழிலிலும், உல்லாசப் பிரயாணத் துறையிலுமே தங்கியுள்ளது.

பெரிய அயல் ஆசிய நாடுகளைப் போலன்றி மாலைதீவு இந்த வளங்களை விரயம் செய்வதில்லை.

மாலைதீவில் நிரந்தர அபிவீருத்தி ஒரு விருப்பமான ஏட்டுக்கல்வியாக மாத்திரம் இல்லாமல் நடைமுறையிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக ஐநா அபிவிருத்தி திட்ட நிறுவனத்தின் மாலைதீவு வதிவிடப்பிரதிநிதி மொஹமத் பராசதீன் கூறுகிறார். மாலைதீவு அதிகாரிகள் சூழல் விடயத்தில் மிகவும் அக்கறை காண்பித்து வருகிறார்கள்.

அவர்களுக்கு இதைத்தவிர வேறு வழியில்லை. சுமார் 2000 பவளத் தீவுகள் இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலிருந்து மத்திய ரேகைக்கு கீழே 700 கி. மீ நீளத்தில் பரந்து கிடப்பதே மாலைதீவு. இவற்றில் பல தீவுகள் கடலில் வெறும் புள்ளிகள் போலவே காட்சியளிக்கின்றன.

பல பவளத் தீவுகள் கடல் மட்டத்திலிருந்து ஒரு மீற்றர் மாத்திரமே உயரத்திலுள்ளன. இவற்றில் சுமார் 700 தீவுகள் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசும் காலத்தில் முற்றாக கடலில் மூழ்கிவிடுகின்றன. ஆழ்கடல் பவளப் பாறைகளே ஓரளவாவது பல தீவுகளைகாப்பாற்றி வருகின்றன இல்லையேல் இவை நீண்ட காலத்துக்கு முன்னரே கடலால் மேவி இருக்கும்.

1973 இல் கைவிடப்பட்ட மக்கள் வாழ்ந்த தீவான கிலிஸ்பருஹீரா உட்பட பல தீவுகள் ஏற்கனவே கடலில் மூழ்கியுள்ளன. கடல்மட்டம் கூடி வருவதற்கு இது ஓர் எச்சரிக்கை அறிகுறியாக இருக்கலாம் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

வரலாறு முழுவதும் மாலைதீவு மக்கள் மாலுமி வல்லுநர்களாக கடற்தொழிலாளர்களாக இருந்து வருகின்றனர். பாரம்பரிய தூண்டில் மீன்பிடியை கையாண்டும் சுற்றிலுமுள்ள கடல்களில் பொறுமையுடன் ஒவ்வொரு மீனாக அவர்கள் பிடிப்பதையும் காணலாம்,

பெரியளவிலான கடல்வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவர்கள் தொழில் செய்வதனால், கடல் வாழ் பாலூட்டிகளும் மீனினங்களும் அழிந்துபோகாமல் காப்பாற்றப்படுவதோடு கடல் வளங்களும் உல்லாசப் பயணத்துறையும் வளர்ச்சி அடைகின்றன.

ஆசியாவின் ஏனைய கரையோரப் பகுதிகளைப் போலன்றி மாலைதீவு உலகின்அதிக பெறுமதி வாய்ந்த புராதன பவளப்பாறைகளை கொண்டுள்ளது. டொல்பின் மீன்கள் கூட்டம் மாலைதீவில் கடற் பிரதேசங்களில் பவனி வருவதையும், சுறாமீன்கள் பவளப் பாறைகளை ஒட்டி உல்லாசமாக சுற்றித் திரிவதையும் அவதானிக்கலாம்.

உல்லாசப் பிரயாணத் துறை மிகக் கவனமாக திட்டமிடப்பட்டுள்ளது. மாலைதீவுக்கு விஜயம் செய்யும் உல்லாசப் பிரயாணிகள் தலைநகர் மாலேயின் புதிய விமான நிலையத்திலிருந்து மக்கள்குடியிருக்காத 60 தீவுகளுக்கு நேரடியாக அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு உல்லாச பிரயாண களிப்பிடங்கள் காண்பிக்கப்படுகின்றன. முஸ்லிம் நாடான மாலைதீவுக் கலாசாரம் மிகக் கவனமாக பேணப்படுகின்றது. உல்லாசப் பிரயாணிகள் அங்கு வாழும் மக்களுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாது. இந்த ஒழுங்குகளினால் இரு பகுதியினருமே மகிழ்ச்சியடைந்தவர்களாக காணப்படுகின்றனர்.

1993இல் இந்த நாட்டிற்கு 240000 உல்லாசப் பிரயாணிகள் விஜயம் செய்துள்ளனர். இந்தத் தொகை மாலைதீவு சனத்தொகையிலும் பார்க்க அதிகமானது. ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து உல்லாசப் பிரயாணிகள் இங்கு விஜயம் செய்யும் பருவங்களில் இன்னும் கூடுதலானோர் எதிர்பார்க்கப்படுகின்றனர்,

வசதி படைத்த, வாடகை விமானங்களில் அங்கு உல்லாசப் பிரயாணம் செய்வோர் தரையில் இறங்க முன்னர் பிளாஸ்டிக் பைகள் அவர்களிடம் கொடுக்கப்படுகின்றன. சேரும் கழிவுப் பொருள்களை சேகரித்து நாடு திரும்பும் போது எடுத்துச் சென்றுவிட வேண்டும் என்றகட்டுப்பாடும் உண்டு.

உல்லாசப் பிரயாணத்துக்குரிய இடங்கள்உள்ளதீவுகளில், உப்புநீரை சுத்தப்படுத்தும் ஆலைகள், கழிவுகளை எரிக்கும் இயந்திரங்கள், ஜெனரேற்றர்கள் ஆகியன பொருத்தப்பட்டுள்ளன. தண்ணீர் அங்கு அதிக பெறுமதி வாய்ந்த பொருளாகும். மழைநீர் நிலத்தின் கீழ்அமைக்கப்பட்ட தாங்கிகளில் சேகரிக்கப்படுகின்றன. கழிவுப்பொருட்களை சேர்த்து வைப்பது பெரிதும் தவிர்க்கப்படுகின்றது. கழிவு நீர் கடலுக்குள் செலுத்தப்படுவதற்கு முன்னர் சுகாதார முறைப்படி கிருமிநாசினிகள் கலக்கப்படுகின்றன.

இவ்வித சுகாதார முறைகள் கடைப்பிடிக்கப்பட்டால் உல்லாசப் பிரயாண முறையால் சூழல்அசுத்தமடையாது மாலைதீவில் உள்ளவர்கள் பெரும்பாலும் சூழல் பாதுகாப்புமுக்கியம்என்பதைஉணருகிறார்கள். இவ்வாறு புதிய மாலைதீவு சூழல் பாதுகாப்பான புளூபீஸ் நிறுவனத்தை சேர்ந்த ஹஸன் ஷிபௌ கூறுகிறார்.

ஆனால், மாலைதீவின் சில பவளத் தீவுகளில் ஒரு காலத்தில் ஆயிரக்கணக்கில்வாழ்ந்து வந்த கடல் ஆமைகள் தற்போது அருகிவருகின்றன கடலாமைகளின் முட்டைகளை திருடுவோர்களாலும் இந்த இனங்கள் அருகி வருகின்றன. கடலுக்குள்வீசப்படும் பிளாஸ்ரிக் குறித்தும் புளூபீஸ் நிறுவனம்கவலைகொண்டுள்ளது. இந்த பிளாஸ்ரிக் பைகள் பவளப் பாறைகளுக்கும் கடல்வாழ் உயிரினங்களுக்கும் தீங்கு விளைவிக்கின்றன.

இதேவேளையில் மாலைதீவுக் கடற்பகுதியில் பாரிய எண்ணெய்க் கசிவு ஏற்பட்டால் என்ன செய்வது என்பது பற்றியும் புளூபீஸ் சிந்தித்து வருகிறது. பாரசீகக் குடாவிலிருந்து கிழக்காசியாவுக்கும், ஜப்பானுக்குமான பாரிய எண்ணெய்த் தாங்கிக் கப்பல் போக்குவரத்துப் பாதையில் அமைந்துள்ளது. மாலைதீவுக் கடற்பரப்பில்பெரிய எண்ணெய்க் கசிவு ஏற்படுமாயின் அந்தநாட்டின்மீன்பிடித் தொழிலுக்கும், உல்லாசப் பிரயாணத் துறைக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

இது எமக்கும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. எண்ணெய்க் கசிவை சுத்தப்படுத்த ஒரு சிறு பிரிவுக்கு பயிற்சி அளித்து வைத்திருக்கிறோம். ஆனால் பாரிய கசிவு ஏற்பட்டால் சர்வதேச உதவியைத் தான் நாட வேண்டும் என புளூபீஸ் கூறுகிறது.

ஆனால் இவை ஒவ்வொன்றுமே கடல் மட்ட உயர்வினால்மழுங்கடிக்கப்பட்டு விடலாமென அஞ்சப்படுகிறது மாலைதீவு தொடர்ந்து உலகஅரங்கிலிருப்பதே கேள்விக் குறியாயுள்ளது. காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த அவசர சர்வதேச நடவடிக்கையை கோரும் சிறுதீவுகளில் மாலைதீவு முன்னணியிலிருக்கிறது.

நன்றி: ஐ பீ. எஸ்.

யாழ்ப்பாணம் நூலகம்

# றுவாண்டா: விபரீதமான மனித நடத்தைகளின் விசித்திரக் கோலங்களின் தளம்

தொடரும் மனித அவலங்கள் குறித்து றுவாண்டாவிலிருந்து வெளிவரும் தகவல்களைப் பார்க்குமிடத்து இனி இவ்வுலகில் மனித குலம் பெருமைப்பட என்ன மிஞ்சியிருக்கின்றது? என்கிறகேள்வியே எழுகின்றது. பைத்தியக்காரத்தனத்தின் உச்சமாக, மனித முரண்பாடுகளின் மொத்தக் களமாக, விசித்திரமான மனித நடத்தைக் கோலங்களின் விளை நிலமாக இன்று றுவாண்டா மாறிவிட்டது. விபரீத மனித நடத்தைகளால் விளையும் அபத்தங்கள் அங்கே நாளாந்தம் அரங்கேறுகின்றன. வீதியோரங்களிலே இறந்துபட்ட மனித சடலங்களுக்கிடையே வெறிபிடித்தாற் போல் நடனமாடுவதும் அலைந்து திரிவதுமான அம்மண வடிவில் மனித உருவங்கள் ஒருபுறம்; மறுபுறமோ பாரிய மனிதப் புதைகுழிகளிலே நாளாந்தம் நடைபெறும் விசித்திரக் கோலங்கள்; கோமாவுக்கு அருகிலுள்ள புதைகுழியொன்றிலே மனித சடலங்களுக்கு மத்தியிலே உயிருள்ள மனித உருவமொன்று கிடப்பதைக் கண்ட மனிதாபிமானப் பணியாளர் எழுந்து செல்லுமாறு அதனைப் பணித்த போது அம் மனிதன் ''எங்கு போய் என்ன பயன்? எப்படியிருந்தாலும் விரைவில் இந்த இடத்திற்கு தானே வர வேண்டும். ஆகவே இங்கேயே நான் இருந்து விடுகிறேன்'' என்றானாம். இன்னொரு புதை குழியிலோ மனச்சிதைவுக்குட்பட்ட இன்னொருவனோ மடிந்த பச்சிளம் சிறுவனொருவன் சடலத்தை தூக்கி வீசி எறிந்து பிடித்து விளையாடிக்கொண்டிருந்தானாம். இவ்வாறு சம்பவங்கள் ஏராளம். எனவே மோசமான சூழலிலே மனிதன் எவ்வாறு தாழ்ந்து விடுகிறான் என்பதற்கு றுவாண்டாவை விட வேறு சான்று தேவைப்படாது. மனித அவலம் என்பதற்கு கற்பனையில் கூட இனி இடமில்லாத நிலையை றுவாண்டா உருவாக்கி விட்டது.

### மக்கள் வெளியேற்றம்

ஆனால் றுவாண்டா முன்னர் எவ்வளவு அழகிய நாடு? வளம் கொழிக்கும் அதன் மலைப் பாங்கான தோற்றமும், உயர் தேயிலைவிளையும் மண்ணும் படி முறை வேளாண்மையின் சிறப்பும் இன்று மறைந்து விட்டன. இன்று அங்கு அறுவடைக்காக சீனிக் கிழங்கு போன்ற பல கிழங்கு வகைகள் இறுங்கு போன்ற பல தானிய வகைகள் அவரைப் பயிர்கள் முற்றித் தயாராகி விட்டன. ஆனால் அறுவடைக்கோ அங்கு மக்கள் இல்லை. 75 இலட்சத்திற்கு மேற்பட்ட றுவாண்டாவின் மக்களில் 22 இலட்சத்திற்குமேல் நாட்டைவிட்டு வெளியேறி விட்டனர். 10 இலட்சம் மக்கள் பலியாகி விட்டனர். நாட்டை விட்டேகுவோர் தொகை இப்படியே தொடருமானால் அரைப்பங்கு மக்களே மிஞ்சியிருக்கப் போகின்றனர். இவ்வாறு வெளியேறியோரில் 1 மிலியனுக்கும் மேற்பட்ட கூட்டு இனத்தினர் சயர் நாட்டின் கோமா மாவட்டத்திலும் 4½ இலட்சத்துக்கும் மேற்பட்ட கூட்டு, துட்சி ஆகிய இரு இனத்தாரும் தான் சானியாவிலும் - றுவாண்டாவைப் போலவே 85 விழுக்காடு துட்சி -15 விழுக்காடு சனத்தொகை கொண்ட புறூண்டியில் இன்னொரு இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டோரும் அகதிகளாகவுள்ளனர். இத்தகைய நிலையிலே இதுவரை காலமும் றுவாண்டாவில் கூட்டு மக்கள் பெருமளவில் தங்கியிருந்த வலயம் ஒன்றை பாதுகாத்து வந்த பிரான்சியப் படையினர் சென்ற ஆகஸ்ட் இறுதிப் பகுதியோடு வெளியேறி விட்டதால் அங்கிருந்தும் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் சயரை நோக்கி இன்னொரு பாரிய வெளியேற்றத்தை தொடங்கிவிட்டனர்.

### உதவி அமைப்புக்களின் அவலம்

ஐ. நாவின் அகதி அமைப்பு உட்பட ஏனைய சகல மனிதாபிமான உதவிப் பணி அமைப்புக்கள் செய்வதறியாமல் திகைக்கின்றன. சயரில் கோமாவில் உள்ள அகதி மக்கட்கே நாளாந்தம் தேவையான 600 மெட்ரிக் தொன் உணவையே பெற முடியாத நிலை. காலரா நோய் காரணமாக நீரின்றி உலர்ந்து இறந்து போவோர்க்கு வழங்கவே நாளொன்றிற்கு சுத்தமான குடி நீர் 7.5 மிலியன் லீற்றர் தேவைப்படுகின்றது. போதிய விமான நிலைய வசதியின்மையால் உகண்டாவின் என்ரெபி நிலையமே இப்போது பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் நீண்ட தூரம், மலைப் பாங்கான சேற்றுப் பாதை, போதிய கனரக வாகனங்களின்மை கொள்ளையில் ஈடுபடும் கும்பல்களை தடுக்க முடியாமை எனப் பல தடங்கல்கள் சூழ்கின்றன. எனவே றுவாண்டாவிற்கு திரும்பிப் போவதே ஒரே வழி என இவ்வமைப்புக்கள் கூட்டு மக்களுக்கு கூறி வருகின்றன.

### மறு சீரமைக்கப்படும் கூட்டு இராணுவம்

ஆனால் இது எளிதில் நடக்கிற காரியமாக தெரியவில்லை. ஏனென்றால் R P F எனப்படும் றுவாண்டா தேசப்பற்றாளர் முன்னணியால் விரட்டப்பட்ட 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னைய கூட்டு இன அரசின் போர் வீரர்கள் இப்போது சயரில் வசதியாக தங்கியிருக்கின்றனர். இன்னமும் படையணிகள் போலவே அதிகார தொடர்புகள் அறுபடாமல் வாகனங்களில் ஆயுதங்களுடன் வலம் வருகின்றனர். இவர்கள் கூட்டு இன மக்களை தங்களோடு தங்க வைப்பதிலே தங்கள் பலம் இருப்பதை உணர்ந்து இம் மக்களிடம் பயப்பீதியைக் கிளப்பி துட்சி அரசினர் பழி வாங்குவதாக கதைகளை கட்டி மக்களை திரும்பவும் போகாது அச்சுறுத்தி வருகின்றனர். தமது மக்கள் ஆயிரக்கணக்கில் இறப்பதை பொருட்படுத்தாத இவர்கள் மனிதாபிமானப் பணிகளில் எவ்வித உதவியும் செய்யாது உணவுப் பொருட்களை தாமே கவர்வதிலும் மது போதைப்பொருட்களைபயன்படுத்துவதிலுமே காலம் கழிப்பதாக கூறப்படுகின்றது.

ஆனால் இவர்கள் இன்னமும் இராணுவம் போலவே படையணிகளாக பயிற்சிகள் பெறுவதும் பழிக்குப்பழி என்கிற வெறிதாண்டவமாட நடமாடுவதும் விரைவில் இன்னொரு போருக்காக தம்மை இவர்கள் தயார்ப்படுத்துவதற்காகவே எனப் பலரும் அஞ்சுகின்றனர். சயர் அரசோ இவர்களை கட்டுப்படுத்த தன்னால் முடியாது என்கிற வகையில் செயற்படுவதாக தெரிகின்றது. இன்னமும் மாத வேதனங்களைப் பெறும் இவர்கள் தத்தமது மேலதிகாரிகளால் பார்வையிடப்பட்டு போர் ஆயத்தநிலையில் வைக்கப்பட முனைவதாக தெரிகின்றது. ஆனால் அதே சமயம் புதிதாக பதவியேற்றுள்ள R.P.F அரசாங்கமோ முடிந்தளவு நடு நிலையாக நடக்கவே முயல்வதாக கூறப்படுகின்றது. புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆட்சி அமைப்பில் அரைவாசிக்கு மேற்பட்டோர் R.P.F போராளி அணியைச் சாராதவரே உள்ளனர். சோர்



போல் ககாமே
(Paul Kagame)
(திறன்மிக்க தளபதி)

போன் பல்கலைக்கழகத்தில் பயின்ற சட்ட அறிஞரான பிசிமொங்கு (Bizimungu) என்கிற கூட்டு இனத்தவரே சனாதிபதியாகவும் பிரதம அமைச்சராககூட்டுஇனத்தைச் சேர்ந்த மிதவாதியான டுவகிரமுங்கு (Faustin Twagirmungu), என்பவரும் உள்ளனர் இவர்கள் தமது கூட்டு இன மக்களை எவ்வித அச்சமுமில்லாமல் நாடு திரும்புமாறு நாள் தோறும் வருந்தி அழைத்தவாறே உள்ளனர். R:P.F இயக்கம் என்கிற பேச்சுக்கே இப்போது இடமில்லை. முன்பு கிளர்ச்சிப் போராளி படையாக இருந்தோம். இப்போது அரசாங்கமாகி விட்டோம்'' எனக் கூறும் இவர்கள் இனப்படுகொலை செய்தோர் முறையாக நீதி விசாரணைக்குட்பட்டே தீர வேண்டும் எனக் கூறுவதும் ஆங்காங்கே துட்சியினப் போராளிகளால் மிகச் சிலரால் கூட்டு மக்கள்கொலை செய்யப்பட்டசில சம்பவங்களும் உகண்டாவிலிருந்து திரும்பிய துட்சி மக்கள் கூட்டு மக்கள் சொத்துக்களை தமதுடமைகளாக்கியதும் கூட்டு மக்களை திரும்பாது தடுக்க போதுமான காரணங்களாகி விட்டன.

## பாலகுமாரன்

### போல்ககாமே

ஆனால் எது எப்படிபிருந்த போதும் இவை எல்லாமே இன்று ஒரேயொரு மனிதன் கையிலேயுள்ளது, R. P. F இயக்கத்தின் திறமை மாறா தளபதியாகவிருந்து இப்போது நாட்டின் உப சனாதிதியாகவும் பாதுகாப்பமைச்சராகவுமுள்ள போல் ககாமேயின் (Paulkagame) கையிலேறுவாண்டாவின் எதிர்காலமிருப்பதாகவும் கருதப்படுகின்றது. மிக இறுக்கமானஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் தனது வாழ்விலும் தனது படையினரிடமும் கடைப்பிடிக்கும் இவரிடம் அதே சமயம் பொறுமையும் எல்லார்க்கும் இடமளிக்கும் இயல்பும் உள்ளதாக கூறப்படுகின்றது. மிக ஆற்றலும்திறமையுமுள்ள அண்மைக் கால கெரில்லா போராட்ட தளபதியாக கணிக்கப்படும் இவர் இதுவரை கூறி வருவது நம்பிக்கை யூட்டுவதாகவேயுள்ளது ''பல மாதங்களாக இனப்படுகொலை நடைபெற்றதோடு நாட்டில் பழிவாங்கல் உடமைகள் பறித்தல் நடப்பதை உடனே தடுக்க முடியாது காயங்கள்ஆற நீண்டகாலம்எடுக்கும். ஆனால் இந்த அரசாங்கத்தையிட்டு எவரும் அச்சமடையத்தேவையில்லை. போல் ககாமே யாரென்பதை வந்து எவரும்பார்க்கலாம்என விறைப்பாக இவர் கூறுகின்றார்.

இன்று முற்றிலுமாக உட்கட்டுமாணங்கள் யாவும் றுவாண்டாவில் அழிந்த நிலையில் மின்சாரம், குடிநீர், சுகாதார வசதிகள், வீதிகள் எதுவுமற்ற நிலையில் அமைச்சர்களே கடிதங்கள் மூலம் செய்திகளை பரிமாறும் நிலையிலுள்ள நாட்டை சட்டியெழுப்பும் பாரிய பொறுப்பு இவர் மீதே இன்று விழுந்துள்ளது இரண்டு வயதிலே நாடு விட்டு உகண்டா சென்று அங்கு அகதி முகாமிலே வளர்ந்து கல்வியை முடித்து உகண்டாவின் கிளர்ச்சி இராணுவத்திலே சேர்ந்து அதில் படிப்படியாக உயர்ந்து புலனாய்வுத்துறை பொறுப்பாளராக மாறியவர்ககாமே. உயரதிகாரிகள் பயிற்சியை இவர்கன்காஸ் நகரிலே பெற்றுக் கொண்டிருந்த போதே 1990-ம்ஆண்டு R.P.Fதனது படையெடுப்பை தொடங்கியது அப்போரில்அப்போதைய தளபதி இறக்கவே அவரிடத்திற்கே ககாமே நியமிக்கப்பட்டார். அப்போது அவர்கூறிய வார்த்தைகளேR:P.F. அமைப்பை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றதாக கருதப்படுகின்றது. ஏனென்றால் அப்போது R P. F. படையணி நிலை கவலைக்குரியதாக இருந்தது. ககாமே அப்போது கூறினார். ''யார் என்னோடு வரப்போகின்றார்கள்? போரிடுதல் என்பது துப்பாக்கிகளை மட்டும் பொறுத்தது அல்ல அல்லது அது பிரதேசங்களைப் பொறுத்ததுமல்ல. அது மனதைப் பொறுத்தது. நாங்கள் கம்புகளால் ஏன் கற்களாலும் சண்டை போடமுடியும்'' இதன்பின் அவர் பின்னே வெற்றியணி திரண்டது.

### புறூண்டியின் நிலை

இப்போது இப்படியொரு இக்கட்டான நிலையில் றுவாண்டா இருக்கையில் புறூண்டி நாட்டிலும் கொந்தளிப்பின் அறிகுறிகள் தென்படுகின்றன அருகருகே இருக்கும் இவ்விரண்டு நாடுகளின் வரலாறும் ஒரே தன்மையை கொண்டவையே. இங்கும் றுவாண்டாவைப் போலவே பெல்ஜியம் வெளியேறிய பின் துட்சியின சிறுபான்மை வசமிருந்த அரசியல் மேலாதிக்கம் கூட்டு பெரும்பான்மை இனத்தார் கையில் சென்றது. ஆனால் ஒரேயொரு வேறுபாடு-இன்னமும் இராணுவம் துட்சி இனத்தவரை பெரும்பான்மையாகக் கொண்டதாகவேயுள்ளது 1962-ம் ஆண்டு இங்கு பெல்ஜியம் வெளியேறியபின் மோதல்கள் பலஏற்பட்டுஇறுதியில்1963-ம் ஆண்டு தேர்தலில் பெற்ற கூட்டு இன சனாதிபதி பதவியேற்றார். எனினும் அவர் துட்சியின இராணுவக் கலகக்காரர் சிலரால் கொல்லப்பட்டார். இதன்தொடர்பிலேற்பட்ட கலவரங்களில் 1 இலட்சம் மக்கள் அங்கு பலியாகினர். பின் அமைதி ஏற்பாடொன்றின்படி இடைக்கால கூட்டு சனாதிபதி யொருவர் நியமிக்கப்பட்டார். ஆனால் அவரும் றுவாண்டா நாட்டு சனாதிபதி காபியாரிபானா கொல்லப்பட்ட விமானத் தகர்ப்பில் இறந்து போனார். இதன்பின் அங்கும் இன்னமும் சனாதிபதியொருவரை நியமிக்கும் முயற்சி இரு இனத்தாராலும் இழுபறிக்குள்ளாக்கப்பட்டு வருகின்றது மிகவும் உறுதியற்ற ஒரு தளம்பல் அரசியல் நிலை இப்போது அங்குள்ளது.

### அச்சம்

எனவே கூட்டு இன மக்கள் கையில் அரசாங்கம் ஆனால் நாட்டின் இராணுவமோ துட்சி இனத்தார் கையில் விசித்திரமான கலவை நிலை. இப்போது தமக்கு உரிமைகள் மறுக்கப்படுவதாக துட்சியின எதிர்க்கட்சிகள் பெரும் ஆர்ப்பாட்டங்களை அங்கு செய்து வருகின்றன. ஆங்காங்கே கொலைகளும் சிறிய அளவில் இடம் பெறுகின்றன. றுவாண்டா துட்சியினப் போராளிகள் கையில் வீழ்ந்ததும் இரண்டரை இலட்சம் கூட்டு மக்கள் அகதியாக இப்போது புறூண்டியிலிருப்பதும் இப்போதுநிலைமைகளைமேலும் மோசமாக்குகின்றன. அதே சமயம் புறூண்டி கூட்டு இனத்தாருக்கு இப்போது ஆயுதங்கள் சயர்மூலம் கிடைக்கத் தொடங்குவதாககூறப்படுகின்றது எனவேஇன்னொருபாரிய படுகொலை நிகழ்வை தடுக்க ஐ நா. சில முன் முயற்சிகளை மேற்கொள்கின்றது. ஆனால் பாரிய படுகொலைகள் இதுவரை புறூண்டியில் நடைபெறாமைக்கு ஒரேயொரு காரணமே கூறப்படுகின்றது. அச்சம் என்பதே அக்காரணம் ஒவ்வொரு இரவிலும் படுக்கப்போகும் கூட்டு இனத்தானோ அல்லது துட்சி இனத்தானோ தன்னை மற்ற இனத்தவன் கொன்று விடுவானோ என்கிற பயத்திலே படுக்கைக்கு செல்வதாக கூறப்படுகின்றது மிக விசித்திரமான விபரீதமான நிலையல்லவா இது?

இப்படியான நிலைமைகட்கு என்ன காரணம் என்று இன்று பல மெத்தப்படித்த ஆய்வாளர்களால் பற்பல ஆய்வுகள் மேற் கொள்ளப்படுகின்றன. பற்பல நூல்கள் வெளியிடப்படுகின்றன. சில ஆய்வாளர்களோ துட்சி இனத்தார்க்கும் கூட்டு இனத்தார்க்கும் அடிப்படையில் பாரிய வேறுபாடுகள் எதுவுமில்லையென்றே வலியுறுத்துகின்றனர். ஒரே மொழியை பேசுகின்ற ஒரேபிரதேசத்தை பகிர்கின்ற ஒரே விதமான அரசியல் அமைப்புக்களை கொண்ட இவர்களிடையே பிளவுகள் தோற்றுவிக்கப்பட்டன என்பது இவர்தம் கருத்து பெல்ஜிய, ஜேர்மனி போன்ற நாட்டோரின் குடியேற்ற கால ஆட்சிக் காலத்தில் விதைக்கப்பட்ட நச்சு விதைகளை இவர்கள் வெளிப்படுத்துகின்றனர். 1930களில் பெல்ஜியம் றுவாண்டாவில் கூட்டு, துட்சி இனத்தாரை தோற்றம் கொண்டு பெரிதாக வேறுபடுத்த முடியாத நிலையில் 10 பசுக்கட்கு மேல் உடைமையாக வைத்திருப்போரை துட்சியாகவும் அதற்கு குறைய வைத்திருந்தோரை கூட்டு ஆகவும் கணித்து அடையாள அட்டைகள் வழங்கியமை இதற்கு சான்றாகின்றது. இவ் அடையாள அட்டைகளே இப்போது துட்சியின மக்களை அடையாளம் கண்டு கொண்டு கொல்ல றுவாண்டாவில் கூட்டுக் கொலைக் குழுக்கட்கு உதவின என்பதே நாம் மனம்கொள்ள வேண்டிய செய்தி.

# மூன்று வார கால ஆட்சியும் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவும்

இரண்டு முன்னாள் பிரதமர்களின் புதல்வியான திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கா சிறிலங்காவின் இரண்டாவது பெண் பிரதமராகப் பதவியேற்று சுமார் மூன்று வாரங்கள் போய்விட்டது. குடும்ப உறவுகளும் - உயர் வகுப்பு பிரமுகர்கள் மத்தியிலான இளமைக்கால வாழ்வின் ஊடாக கிடைக்கப்பெற்ற நட்பும் திருமதி சந்திரிகாவின் அரசியல் அடித்தளத்திற்கு ஆதாரங்கள் என்று கூறலாம். எனினும் பிரதமர் பதவியை அடைவதற்கான அவரது பயணம் இலகுவானதாகவும் சுலபமாகவும் அமைந்துவிடவில்லை. இழப்புக்களும், வேதனைகளும், துயரங்களும் நிறைந்த நீண்ட நெடிய பயணமாகவே இது அமைந்துவிட்டது என்பது ஒருபுறம். அவர் பெற்றிருக்கும் பதவி கூட ஒரு மலர்ப்படுக்கையாக இல்லாமல், முட்கிரீடமாக இருப்பது மற்றுமொரு புறம்.

தனது மிக இளம் வயதிலேயே தந்தையை இழக்க நேர்ந்த சந்திரிகா, ஆரம்ப காலம் முதலே எதிர் நீச்சல் போடும் மனப்பாங்கையும், தீவிரத் தன்மையையும் கொண்டவராகவே வளர்ந்தவர். சில சமயங்களில் தமது பெற்றோரின் எண்ணங்களையும், போக்குகளையும் கூட கடுமையாக விமர்சிப்பவராகவே காணப்பட்டார். குறிப்பாக தமது திருமணம் குறித்து கூட தன்னிச்சையாக அவர் முடிவை மேற்கொண்டாரென்பதும், அதனால் அவர்களது குடும்பத்திற்குரிய மரபொழுங்கின்படி அவரது திருமண வாழ்வுகூட ஆரம்பமாகவில்லை என்பதும் இங்கு சுட்டிக் காட்டக்கூடியதாகும்.

### நடந்து வந்த பாதை

1982 இன் ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து சுதந்திரக் கட்சியிலிருந்து தமது கணவரான விஜயகுமாரணதுங்காவுடன் வெளியேறி சிறிலங்கா மக்கள் கட்சியைஅமைத்தார். லங்கா சமசமாஜக் கட்சி, நவ சமசமாஜக்கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி என்பவற்றுடன் இணைந்து ஐக்கிய சோசலிசக் கூட்டணியை தோற்றுவித்து செயற்பட்டார். விஜயகுமாரணதுங்கா அரசியற் படுகொலைக்கு இலக்கானதைத் தொடர்ந்து சில காலம் அரசியல் அஞ்ஞாதவாசம் பூண்ட திருமதி சந்திரிகா, மீண்டும் 1992 இல் காட்சி தரலானார் சிறிலங்கா மக்கள் கட்சியை ஒஸி அபயகுணசேகராவும், வை. பி. டி. சில்வாவும் பங்கு போட்டுக்கொண்ட நிலையில் பகுஜன நிதாஸ் பெரமுனவை ஆரம்பித்து சில இடதுசாரிக் கட்சிகளுடன் இணக்கம் கண்டு, சுதந்திரக் கட்சியின் தலைமையில் பொதுஜன ஐக்கிய முன்னணியை திருமதி சந்திரிகா உருவாக்கினார். அதன் ஊடாகவே தேர்தல்களுக்கு முகம் கொடுத்து வெற்றி பெற்றார்.

பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட முதற்தடவையிலேயே பிரதமராகவும் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பம் அவருக்கு வாய்த்துள்ளது. எனினும் இதுகூட தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் இது இலகுவாக அவருக்கு வந்து சேர்ந்து விடவில்லை. ஆளும் கட்சி அந்தஸ்தை இறுதி நேரம் வரை இழக்க விரும்பாத ஐக்கிய தேசியக்கட்சி செய்த சதிகளுக்கும், சூழ்ச்சிகளுக்கும், குழறுபடிகளுக்கும் ஈடு கொடுத்து வெற்றி வாய்ப்பை நழுவிப் போய்விடாமல் கட்டிக் காக்க வேண்டிய அவசியம் நேரிட்டது.

### திருமதி சந்திரிகாவின் ஆளுமை வெளிப்பாடுகள்

திருமதி சந்திரிகாவின் ஆளுமை வெளிப்பாடுகுறித்து இப்போதே கருத்துக் கூறுவதோ அல்லது கணிப்பீடு செய்வதோ அவசரக் குடுக்கைத்தனமாக இருக்கலாம். எனினும் பதவியேற்றது முதல் இதுவரை அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை முடமானவாத்துஎனவர்ணிக்கப்படும் நிலையை ஏற்படுத்தியிருப்பது கண்கூடு. பதவியேற்பதற்கே ''ஊரடங்கு உத்தரவு'' தளர்த்தப்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்த திருமதி சந்திரிகா, பதவியேற்ற சில மணி நேரங்களிலேயே 'ஊரடங்குஉத்தரவு' அமுல்படுத்தப்படுவதில் தமக்குள்ள அதிருப்தியை பகிரங்கமாக வெளிப்படுத்தி ஜனாதிபதி மூலம் அதனை மீளப்பெற வழிவகுத்தார். மேலும் மாகாணங்களுக்கான ஆளுநர் நியமனம் என்பது ஜனாதிபதியின் கடமையாகவே இருக்கின்ற நிலையில், வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநரான லயனல் பெர்னாண்டோவை லேக் ஹவுஸ் நிறுவனப் பணிப்பாளராக்கியும், வடமேல் மாகாண ஆளுநரான ஈ.எல்.பிஹாருள்ளேயை பதவி விலகச் செய்தும் தமது வலிமையை திருமதி சந்திரிகா புலப்படுத்தி இருக்கின்றார். இது போன்ற விவகாரங்களில் எல்லாம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி வெறும் பொம்மை போலவே செயற்பட வேண்டி ஏற்பட்டு இருந்துள்ளது. இதனாலேயே மனம் வெதும்பிய முன்னாள் இராஜாங்க அமைச்சர்ஒருவர் பிரேமதாசா அரசாங்கத்தில் 'பியோன்' போல செயற்பட்டிருந்த டி.பி. விஜேதுங்க இப்போதும் அவ்வாறே செயற்படுகின்றார் எனத் தெரிவித்தார்.

இவை தான் இப்படி என்றால் இன்னும் ஒருபடி மேலே போய் திருமதி சந்திரிகா வாராந்தம் இருமுறை அமைச்சரவையை கூட்டுவது என்று தீர்மானித்து இருப்பது ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்திற்கே ஒரு சவால் எனலாம். திங்கட்கிழமைகளில் அலரி மாளிகையில் பிரதமர் திருமதி சந்திரிகா தலைமையில் அமைச்சரவை கூடி விடயங்களை ஆராய்ந்து முடிவுகளை மேற்கொள்ளும் என்றும் பின்னர் புதன் கிழமைகளில்ஜனாதிபதி தலைமையில் உத்தியோகபூர்வமாக அமைச்சரவை கூடும் போது மேற்படி முடிவுகள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் பிரதமர் திருமதி சந்திரிகா திட்டமிட்டுள்ளார். இதன் மூலம் அமைச்சரவையின் உள் முரண்பாடுகள் ஜனாதிபதியினதும், ஐ. தே. க. வினதும் கவனத்திற்கு எட்டப்படாமல் தவிர்க்கப்படுவதுடன் அமைச்சர்கள் மனம் திறந்து விவாதிக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டு இருக்கிறது. அத்துடன் ஜனாதிபதியுடன் முரண்படும் சந்தர்ப்பமும்விலக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக மிக நாசூக்கான தந்திரங்களினாலும், புத்திபூர்வமான அணுகுமுறையாலும் ஜனாதிபதி ''இருதலைக் கொள்ளி'' நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார் இதனாலேயே அவர் 'அரசியல் சுகவீனத்திற்கு' உள்ளானதாகக்கூறப்படுகிறது.

### ஐ. தே.க வின் திண்டாட்டம்

பதவி ஏற்றுக்கொண்ட திருமதி சந்திரிகாவின் செயற்பாடுகளால் கிலி கொண்டிருப்பவர்கள் ஐ. தே கவினர் என்பது எதிப்பார்க்கக் கூடியதே திறைசேரியிலிருந்து பெருமளவு பணம் காணாமல் போயிருக்கிறது என்றும் முன்னால் அமைச்சர்களின் அதிகார துஷ்பிரயோகங்கள், ஊழல்கள் என்றும் முந்திய அரசியல் படுகொலைகளின் சூத்திரதாரிகள் என்றும் அடுத்தடுத்துப் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவது கண்டு கிலி பிடித்துள்ள ஐ. தே, கவினர் காமினி திசாநாயக்காவின் நிழலில் தஞ்சம் புகுகின்றனர் ரணிலின் பெருந்தன்மை அரசியலால் தமது கடந்தகால அழுக்குகள் அம்பலமாகிப் போகும் எனக் கருதும் இத்தகையோர் காமினியின் நயவஞ்சக அரசியல் தமக்கு உதவும் எனக் கணிப்பிட்டுள்ளனர் போலும் இதனாலேயே திருமதி சந்திரிகா தலைமையிலான அரசு முன்வைக்கும் கொள்கை ரீதியான முடிவுகளுக்கு தலையாட்டி ஆமாம் போடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனலாம். வடபகுதி மீதான பொருளாதாரத் தடை நீக்கல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு, அவசர கால நிலை கைவிடப்படல் என்பனபோன்றவற்றில் ஐ, தே, கவின் நிலைப்பாட்டை இவ்வாறு தான் புரிந்து கொள்ள முடியும்.

இதனைத் திருமதி சந்திரிகாவும் புரிந்து கொண்டுள்ளார் என்பதை 'இந்து' இதழுக்கு அவர் அளித்த பேட்டியில் தெரிவித்த கருத்துக்கள் கோடி காட்டுகிறது எனலாம் பதவிப் பிரமாணம் செய்வதற்கு சில மணி நேரம் முன்பு வரை சதி செய்த எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்புக்கு ஆதரவு தருவதாக கூறுவதில் பிரச்சினை இருக்கிறது. நாட்டின் நல்லெண்ணத்தில் அவருக்குள்ள அக்கறை சந்தேகத்திற்கு உரியது. கண்டியில் கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதியின் பின்னணியில் இவருக்கும் தொடர்புண்டு என்ற வகையில் திருமதி சந்திரிகா அதில் கருத்து வெளியிட்டு இருந்தார்.

ஆயினும் பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பலம் இல்லாத நிலை, எதிர்க்கட்சியின் கையில் இருக்கும் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி, வெறுமையாகக் காட்சி தரும் அரசாங்கத் திறைசேரி, வரவு- செலவுத் திட்டத்தின் பெரும்பகுதியை நுகரும் வகையில் பூதமாக வளர்த்துவிடப்பட்டுள்ள இராணுவம் என்பன போன்ற பலவற்றுக்கு மத்தியில் நூலிழையில் நடை பழக வேண்டிய நிலை தான் திருமதி சந்திரிகாவிற்கு வாய்த்துள்ளது.

இவை அனைத்தையும் எதிர்கொண்டு சமாளிக்கும் திறனும், துணிவும் சந்திரிகாவிற்கு உள்ளதாகவே கடந்த மூன்று வாரகால ஆட்சி காட்டிநிற்கின்றது. ஆயினும் தோல்வியால் ஏற்பட்ட குழப்பத்தில் இருந்து ஐ.தே.க விடுபடவும், காலம் செல்ல புதிய அரசிற்கு முன்னால் எழப்போகும் பிரச்சினைகளுமே சந்திரிகாவின் முழுமையான ஆற்றலை வெளிப்படுத்தும் என்பதும் அதன் பின்பே அவரது அரசியல் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படும் என்றேகூறலாம்.

**இளையவன்**

---

# 'குழந்தைப் பருவம்'

## வாகீசனின்கன்னிக்கவிதை பரிசில் வென்றது

ஆச்சரியம் வாகீசனின் (17) 'குழந்தைப் பருவம்' என்ற கன்னிக் கவிதை பரிசில் வென்றது. ஸ்காபறோ, வெஸ்ரர் B. பியர்சன் கல்லூரி நிறுவனத்தில் 12-ம் வகுப்பில் படிக்கும் மாணவன் அவன். அவன் யாழ்ப்பாணத்தில் பிறந்து தமிழ் மூலம் 10-ம்வகுப்பு வரை கல்வி பயின்றிருந்தான் கனடாவுக்கு வந்த இரண்டு வருஷங்களில் தனது பாடசாலையில் நடைபெற்ற ஆங்கிலக் கவிதைப் போட்டியில் இப்பரிசிலைப் பெறுகின்றான் சிறிலங்கா தமிழ் எழுத்தாளர் நெல்லை க. பேரனின் ஒரே ஒரு மகன் தான் இவனுடைய நண்பன் சண்.

'போட்டியின் தலைப்பு; குழந்தைப் பருவம் எனது வகுப்புத் தோழர்கள் ஏதாவது இன்பகரமாக எழுதுவார்கள் என்று அனுமானித்தேன். ஏதாவது வேறு விதமாக எழுத நான் எண்ணினேன்' என்று கூறுகின்றான் வாகீசன்.

'எவ்வாறு வித்தியாசமாக?'

'எனது நண்பன் சண் இன்று உயிருடனில்லை. அவன் உயிருடன் இருப்பின், அவனது நினைவுகள் எனக்கு இன்பத்தைக் கொடுப்பதாக இருக்கும். அவன் உயிருடன் இல்லாததனால் அந்த நினைவுகள் என்னைப் புண்படுத்துகின்றன, இந்தக் கவிதையில் நான் அவனை இழக்கின்றேன்.

எனது சொந்த நாட்டில், புதிய தவணை ஆரம்பத்தில், ஆசிரியை பெயர்களைக் கூப்பிட ஆரம்பிப்பார், எனக்குத் தெரியும் அவர் சண்ணைக் கூப்பிட மாட்டார், அவனுடன் கழிந்த நாட்கள் மறக்க முடியாதன. மாமரங்களில் இருக்கும் அணில்களை நாம் துரத்திய நாட்கள்,

ஒரு பொழுது போக்காக நாம் ரவைகள் சேர்த்த நாட்கள்,
பாடசாலை போகாது, முயல் பிடிக்க, மீன்பிடிக்க
நாம் சென்ற நாட்கள்,
பதுங்கு குழிகளில் நாம் பதுங்கிய நாட்கள்,
இவைகள் இருளாகவும், சேறாகவும், இரவில் பாம்புகளும், தேள்களும் நிறைந்தனவாகவும் இருந்தன

சொற் செட்டும் கருத்து நயமும் கவிதையை
அலங்கரிக்கின்றன.

தனது குழந்தைப் பருவ நினைவுகளைச் சொல்லும் பாங்கு வாசகரின் இதயத்தைத் தொடுகின்றது. சிறிலங்காவில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தில் எவ்வாறு ஒரு பாவமுமறியாத உயிர்கள் பலியாகின்றன என்பதை நாம் கண்ணீர் வடிக்கும் விதத்தில் அவன் படம் பிடித்துக் காட்டுகின்றான்- மூன்று வருடங்களுக்கு முன் இலங்கையில் இறந்து போன தனது நண்பனின் இழப்பில் தன்னுடன் சேர்ந்து துக்கிக்க கனடா வாசகர்களை நிச்சயப்படுத்திக் கொள்கின்றான்.

ஆங்கில மூலம்: எஸ்- வேலுப்பிள்ளை
தமிழில் மூ-சி- சீனித்தம்பி
நன்றி: லங்கா காடியன்
ஜூலை 1, 1994

---


**தியாகி திலீபன்**

**7ஆம் ஆண்டு நினைவு தின**

**கோட்ட, மாவட்ட ரீதியான**

**கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகள்**

தமிழீழ மாணவர்களே!
விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு
மகளிர் பிரிவினர்
அளிக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
உங்கள் படைப்பாற்றலைக் காட்டி பெறுமதிமிக்க
பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்று மகிழுங்கள்.

போட்டி விதிமுறைகள்: 22. 08. 94 ஈழநாதம் பார்க்கவும்

போட்டி முடிவுத் திகதி 10-09-94

விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பு (மகளிர்)

(சி-10169]

யாழ்ப்பாணம்

## சிறுகதை

# அவலங்கள்

**தி. உதயசூரியன்**

இரவு முழுவதும் சோனா வாரியாக மழைபெய்து விடியத்தான்சற்று ஒய்ந்திருந்தது. இருந்தும் கருக்கொண்ட மேகங்கள்இன்னும்கலையவில்லை. அங்கும் இங்குமாக திட்டுத் திட்டாக நிலை கொண்டிருந்தன. அடுத்தொரு நீண்ட தூற்றலுக்கான ஆரவாரிப்பு.

தொடர்ந்து ஒருகிழமைக்கு மேலாகப் பெய்துவரும் அடை மழையினால் அந்தஅகதிமுகாமில் இருந்த ஐம்பத்தி ஐந்து குடும்பங்களும், பக்கத்திலுள்ள தமிழ்ப் பள்ளிக்கூடத்திற்குள் சரண்புகுந்திருந்தனர். பள்ளிக்கூடப் பிறின்சிப்பலுக்குத் துப்புரவாய் இவர்களை அங்கு வைத்திருக்க விருப்பமில்லை. எப்ப மழைவிடும்; எப்ப இவர்களைமுகாமிற்குத் துரத்தலாம்என்றயோசனை.

சொந்த இடங்களிலிருந்து, இடம்பெயர்ந்து வந்த மக்களைச் சும்மா கிடந்த சிங்கப்பூர்க் காணிகளைஇனம்கண்டு கட்டிக்கொடுத்த குடிசைகளே இவர்களது தற்போதைய மாளிகைகள். மிகவும் தாழ்ந்த வளவாய் இருந்தபடியால் ஊரிலுள்ள வெள்ளம் முழுவதும் இவர்களது முகாமிற்குள் புகுந்து பெரிய குளம்போலக் காட்சி அளித்தது.

இந்த முகாமில் இருப்பவர்களில் அநேகமானோர் கடற்றொழில் செய்தேவாழ்ந்தவர்கள். ஊருக்குள் இராணுவம் பிரவேசித்ததும் சேர்த்து வைத்த பொருள் பண்டங்களையும் விட்டு விட்டு ஓடிவந்தவர்கள். ஒருசிலர் மட்டும் அவசரம் அவசரமாக வரும்போது தங்களுடன் தங்களது தொழிலுக்குத் தேவையான வலை, பறி போன்றவற்றை எடுத்து வந்திருந்தனர்.

தினமும் முகாமில் இருப்பவர்களில் ஆண், பெண் வித்தியாசமின்றிகடற்றொழிலுக்கு பொன்னாலை, திருவடிநிலைப் பக்கம் போய் வந்தனர் என்றும், எப்பத்தான் முந்தின மாதிரி நிம்மதியாய்க்கடலுக்குப் போய்வர முடியுமோ என்று மனதினுள் நினைத்தவாறு சின்னவனும்,கோவிந்தனும் வழமைபோல தொழிலுக்குப் புறப்பட்டனர்.

சின்னவனும் கோவிந்தனும் சகோதரர்கள். பறியையும், வலையையும் தோளில்போட்டுக்கொண்டு பொன்னாலைப் பாலத்தை அண்டியகடலுக்கு நடையைக் கட்டினர். இவர்களது பிடிபாட்டைப் பொறுத்தே அன்றாட கறி, புளிபாடு ஓடிக்கொண்டிருந்தது.

அரசாங்கம் அகதிகளுக்குத் தாற நிவாரணத்தைப்பற்றிச் சனங்கள் பெரிசாய் அலட்டிக் கொண்டாலும், இந்தக் குடிசையில் வாழும் குடிபெயர்ந்தவர்களுக்குத்தான் தினமும் தாங்கள் படும் கஷ்டங்கள் புரியும். வெறும்கஞ்சியைக் குடித்தாலும் தன்ரை,தன்ரை ஊரிலை இருக்குமாப்போலவருமே என்ற வலுவான எண்ணம் எல்லோருக்கும்.

சங்கக்கடையிலே கியூவிலை நிண்டு நிவாரணச் சாமான்களைத் தலையிலை வைத்துத் தூக்கிக்கொண்டு வரேக்கை பார்த்துவிட்டு,எத்தனை சனங்கள் பெருத்த பெருமூச்சு விடுகுதுகள். இவர்களெல்லோரும் இப்பவும் தங்கடை, தங்கடை வீடுவாசல்லை இருந்து வாழ்பவர்கள்.

அம்மாப்பச்சை அரிசியையும், அமெரிக்கன் மாவையும், மைசூர்ப்பருப்பையும், கையிலண்ட் பால்மாவையும் படியளந்துவிட்டு, அகதிகளுக்காக எத்தனையோ கோடி ரூபா செலவழிக்குது அரசாங்கம், மாதாமாதம் எண்டு பேப்பரிலை பெரிசாய்ப் போட்டதைப் பார்த்துவிட்டு, படித்தவர்கள் கூட ''உவங்களுக்கென்னஅகதியெண்டசாட்டிலை கடவுளே எண்டு பறவாயில்லை, சும்மா கிடந்துகொண்டு சாப்பிட்டுக்கொண்டு திரியிறாங்கள்''என்று சொல்வதும் இவர்களின் காதுகளில் விழாமலில்லை.

தூரத்தே பொன்னாலைப் பாலம் எட்ட நடையைப் போட்ட கோவிந்தனிடம்,

''இண்டைக்கும் மனிசி சொன்னவள், உப்பு, புளி, தேங்காய் முதல் கொண்டு வாங்க வேணும், அடுப்புக்கை வைக்க ஒரு துண்டு விறகு கூட இல்லை. பச்சை விறகை வாங்கியந்து அடுப்புக்கை வைச்சு ஊத, கண்ணும் அவிஞ்சு போச்சு. வலையிலை ஏதாவது படாவிட்டால், என்பாடு அதோகதிதான்'' என்றான் சின்னவன்.

மகன் மணி, முகாமிற்குச் சற்றுத் தள்ளியுள்ள தமிழ்ப் பள்ளிக்கூடத்திலை ஆண்டு நாலில் படிக்கிறான். அவனுக்குத்தேவையானகொப்பி, பென்சில் வாங்கவாவது பிடிபாடு இருக்க வேணும் இண்டைக்கு. நாளைக்கு கொப்பி, பென்சில் வேண்டிக் குடுக்காட்டி, தான் பள்ளிக்கூடம் போகமாட்டன் எண்டு நிற்பான், கோவிந்தன் மனதிலும் எண்ண ஓட்டங்கள்.

இருவரும் தத்தம் வலைகளை தங்கள் குலதெய்வத்தை நினைத்துக் கொண்டு வீசினர். கசூரினா பீச் பக்கமிருந்து ''டொம், டொம்'' என்ற பயங்கரச் சத்தம் வந்தது. ''கண்போட்டிலிருந்து அடிக்கிறாங்கள்'' சின்னவன் முணுமுணுத்தான். ''இண்டைக்கு என்னதான் அடிச்சாலும் ஏதாவது பிடிச்சுக் கொண்டுதான் போக வேணும்'' கோவிந்தனின் மனம் இப்படிக் கூறியது.

ஒருபுறம் கண்போட்டிலிருந்து காதுகளைப் பிய்க்கும் சத்தத்துடன் அடி. மறுபுறம் வலந்தலைச் சந்தியிலிருந்து துப்பாக்கிச்சூடு, ''ஆமிக்காரன் மீன்பிடிப்பவர்கள் எண்டு தெரிந்து கொண்டும் அடிக்கிறான்கள். இண்டைக்கு விடமாட்டான்கள் போலை கிடக்கு'' எண்டு கோவிந்தன் கூறி வாய் மூடுவதற்குள் துப்பாக்கிச் சன்னம் ஒண்டு கோவிந்தனின் மார்பைப் பதம் பார்த்தது. ''ஐயோ'' என்ற குரல் வந்த பக்கம் பார்த்தான் சின்னவன். இரத்தம் பீறிட்டவாறு கோவிந்தன் பாலத்துக்குக் கீழே கிடப்பதை அவதானித்தான். தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள் வந்த வண்ணமிருந்தது. கடலில் குதித்த சின்னவன், பாலத்தின் கல்லொன்றில் பிடித்தபடி சிறிதுநேரம் தொங்கினான். உடனடியாக கோவிந்தனின் உடலைத் தூக்கிக் கொண்டு செல்ல முடியாதவாறு ஷெல்களும் பொன்னாலைச் சந்தியை நோக்கி ஏவப்பட்டுக் கொண்டிருந்தன.

கீழே குதித்து, கோவிந்தனின் உடலை சற்றுத் தூக்கிப் பார்த்தான். உடல் குளிர்ந்து கொண்டு போவதை சின்னவன் உணர்ந்தான். ''ஐயோ அண்ணை'' துடிதுடித்து அழுதான்.

சத்தங்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஒய்ந்தது. இரத்தம் ஒடிகுளிர்ந்து போயிருந்த தமையனை தோளில் போட்டுக் கொண்டு முகாமை நோக்கி நடந்தான்.

முகாம் அமளிதுமளிப்பட்டது. தொடர்ந்து பெய்த மழையினால் சேறும், சகதியுமாய் இருந்த முகாமில் ''பொடி'' யை வைத்து செத்தவீடு நடத்த முடியவில்லை.

முகாமின் முன்னுக்கு இருக்கும் கல்வீடு, பென்சனியர் பேரம்பலத்துடையது. அந்த நாளையிலை அந்த ஏரியாவிலேயே பெரிய வீடு எண்டால் பேரம்பலம் வீடு ஒண்டுதான். பேரம்பலம் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் முப்பது வருஷங்களுக்கு மேலாக ஸ்ரோர்கீப்பராக வேலை செய்து, நல்லவெட்டுக் கொத்துடன் உழைச்சதால் கட்டிய வீடு அது.

பேரம்பலத்தாருக்கு இந்த அகதி முகாம் இதிலை இருக்கிறதே துப்புரவாய்ப் பிடிக்காத விசயம். அகதி முகாம் போடவெண்டு வளவை வந்து பார்க்கேக்கையே தனது எதிர்ப்பைத் தெரிவித்தவர்; அது சரி வராமல் போகவே வாயை மூடிக்கொண்டார்.

அகதிமுகாம் தலைவர் கதிரன்,முன்வீட்டில் சார்மனைக் கதிரேக்கை கிடந்துகொண்டு சுங்கானை வாயில் வைத்து ரசித்து,ரசித்துப் புகைவிட்டுக் கொண்டிருந்த பேரம்பலத்தார் வீட்டை ஓடினான்.

ஐயா... ''அது ஆருது''... ''அது நான்தான் ஐயா,முகாமிலை இருக்கிறனான்; முகாமிலை இருக்கிற கோவிந்தன் கடலிலை தொழில் செய்யப் போன இடத்திலை ஆமி சுட்டுச் செத்துப் போனான்;முகாமுக்கை கால் வைக்கமுடியாத அளவு சேறும், சகதியுமாய்க் கிடக்குது. அதுதான்''... 'அதுதான்என்னசொல்லு...' ஒரு அதட்டு அதட்டினார் பேரம்பலம்.

ஒரு வாங்கு தந்தியள் எண்டால் சவத்தை அதிலை வளத்தலாம். பிறகுவடிவாய்க்கழுவிப்போட்டுத் திரும்பத் தரலாம் எண்டு பார்க்கிறன்.

என்னடா கேக்கிறாய்; எங்கையிருந்து வந்து என்னைப் பார்த்து சவம் வளர்த்த வாங்கு கேக்கிறாய்;அவ்வளவு துணிவுதானே உனக்கு; பேரம்பலம் துள்ளி விழுந்தார் கோபத்தினால்.

கதிரன் அதிர்ச்சியடைந்தவனாய்,ஐயா நான் கேட்டது பிழைதான் என்னை மன்னிச்சுப் போடுங்கோ என்று கூறிவிட்டு கண்கள் கனக்க முகாமை நோக்கி நடந்தான்.

ச்சா, இவனும் ஒரு மனுசன்...இங்கு நடக்கும் போராட்டத்தைச் சாட்டாகச்சொல்லிக்கொண்டு பல லட்சம்ரூபா செலவழித்து ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ், கனடா எண்டெல்லாம் போய்அகதிஎண்ட முத்திரை குத்திக்கொண்டு தங்களைவளர்த்துக்கொண்டிருக்கிறவர்களா நாங்கள். ஊர்விட்டு ஊர்வந்து எத்தனை வடுச்சொற்களைக் கேட்டுக் கொண்டு இந்தக்குடிசைகளில் சீவியம் நடத்திறம். கதிரனின் மனம் பல கேள்விகளைக்கேட்டுக் குழப்பிக் கொண்டது.

முகாம் வாசலில், கோவிந்தனின் மனைவியும், மகனும் பிரேதத்தின் மேல் விழுந்து அழுது புலம்பிய வண்ணமிருந்தனர்.

வானம் மீண்டும் மந்தாரமாக இருந்தது. ஆங்காங்கே சிறுசிறு தூறல்கள் விழுந்தன. அந்தஊரிலுள்ள பிரேத வண்டிலில் பச்சைப் பன்னாங்கில் கோவிந்தனின் உடல் மயானத்தை நோக்கிநகர்ந்துகொண்டிருந்தது.

★ ★

முகாமின் வாசலில், இன்னும் சனக்கூட்டம் குறைந்தபாடில்லை மழைவிட்டு விட்டு தொடர்ந்து கொண்டிருந்தது மயானத்திலிருந்து திரும்பி வரும் பிரேத வண்டிலின் மணியொலி, முகாம் வாசலை எட்ட மீண்டும் அழுகுரல் எழுந்தது.

''ஐயோ எண்டமனுசனுக்கு ஏதோ செய்யுது, ஓடிவாங்கோ, ஓடிவாங்கோ முன் வீட்டு பேரம்பலத்தாரின் வீட்டிலிருந்து வந்த கூக்குரல் அழுகையோடு இருந்தவர்களையும், ஓட வைத்தது.

முன் விறாந்தையில் பேரம்பலத்தார், சார்மனைக் கதிரையில், சரிந்து கண்கள் குத்திட்டு நிற்க, விறைத்திருந்தார்.

கிட்டப்போய், தொடவும் அஞ்சியவாறு, அவரைப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள் முகாமிலிருந்த மக்கள்.

ஐயோ, பார்த்துக் கொண்டிருக்கிறியளே. தூக்குங்கோ பேரம்பலத்தாரின் மனைவி இன்னும் உரக்க குழறினார்.

கதிரன், அருகில் போய், தலையை தொட்டு நிமிர்த்தி ஆள் போயிட்டுது, பதிலை எதிர்பார்க்காமல், பேரம்பலத்தாரின் சடலத்தை தூக்கி இருத்தினான்.

ஊருக்குள் சொல்லவும். முகாம் பொடியள் ஓடினார்கள் பிள்ளை குட்டியில்லாத அவரது சாவுக்கு ஒன்றிரண்டு பேராவது வரத் தொடங்கினார்கள்.

மாதகல் பக்கமிருந்தும் கண்போட் சத்தம் தொடர்ந்து கொண்டிருந்தது யாழ் நகர்ப் பகுதியில்காலையிலிருந்துவிமானங்கள் நடத்திய தாக்குதல் நேரகாலமில்லாமல் மழையிலும் தொடர்ந்து கொண்டிருந்தது பெட்டியும், கோச்சும் பிடிக்கவென வெளிக்கிட்ட ஒன்றிரண்டு பேரும், வீணாக குண்டு வீச்சுக்குள் தலையைக் கொடுக்க பயந்து பின்வாங்கி விட்டனர்.

மப்பும்மந்தாரமுமானவானமும், பிரேதத்துக்கு அருகில் கொளுத்தி வைக்கப்பட்டிருந்த ஊதுபத்தி வாசனையும், அங்கிருந்தவர்களையும் விரைவாக வீடுகளுக்கு போய்விட வேண்டுமென்ற எண்ணத்தை தந்து கொண்டிருந்தது. அமராவதியின் அண்ணர் வந்து பிரேதத்தை நேரத்துடன் எடுக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தார்.

பிரேதத்தை கேர்ஸ் பிடித்துக் கொண்டு போக வேணுமெண்டு அமராவதி தொடர்ந்தும் அடம்பிடித்தாள் அண்ணரோடு. தமையன் பிரச்சினையை சொல்லி இறுதியில் பிரேத வண்டிலிலேயே கொண்டு செல்வதென்று முடிவெடுக்கப்பட்டது.

செத்த வீட்டில் இருந்தவர்கள் பேரம்பலத்தாரின் சாவைப் பற்றிப் பலவாறு விமர்சித்தார்கள். ''ஆசை பிடித்த மனுசன். அனுபவிக்காமல் போட்டுது;இறிகேசன் டிப்பாட்மென்டிலை இருந்து அடிச்சுக்கொண்டு வந்து கட்டின வீடுதானே உது''பலரது வாய் இப்படி முணுமுணுத்தது.

இந்த ஊருக்கெண்டு பிரேத வண்டிலொண்டு செய்யவெண்டு பதினைந்து வருஷங்களுக்கு முன்னர் ஊரிலை படலை படலையாய்த் திறந்து காசு சேர்த்துக்கொண்டுவரேக்கை பேரம்பலத்தார் சொன்னது, ''உங்களுக்கெல்லாம் வேற வேலை இல்லையே; நான் உதுக்குக் காசு போடமாட்டன்; என்ரை 'பொடி' உங்கடை வண்டில்லைபோகச்சரிவராது என்ரை நிலைக்கு உதிலை போறது தகுதியாயும்இராது; என்ரை பிரேதம் கேர்ஸிலை மரியாதையாகத்தான் போகும்'' என்று காசு போடாமல் விட்டவர்.

மயானத்தில்கோவிந்தனின் உடலை இறக்கிவிட்டு வந்து, பேரம்பலத்தின் பிரேதத்தை அதே வண்டில் சுமந்து கொண்டு மயானத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. பிரேதவண்டிலின்மணியொலி இப்போது மெல்ல மறைந்து கொண்டு போய்க்கொண்டிருந்தது.

★ ★

பள்ளிக்கூட மதிற் சுவரை ஒட்டி ஒட்டி உள்ளே போவதா வேண்டாமா, அந்தச் சிறுவன் தடுமாறிக் கொண்டிருந்தான் அவனது வெள்ளை நிறச்சட்டை பழுப்பு நிறமாகி வெகு காலமாயிருந்தது. ''என்ன மணி பெல்லடிக்கப் போகுது உள்ளுக்கு வாவன் குடையை மடித்தபடி ரீச்சர் ஒருவர் அந்தச் சிறுவனை அணுகினார். அவனது கண்களில் மிரட்சி ''இன்டைக்காவது கொப்பி கொண்டு வந்தனியா? இல்லாட்டி முழுசிக் கொண்டிருக்கப் போறியோ'' ரீச்சர் அவனை உலுக்கினார். அவன் நிமிர்ந்து பார்த்தான். கண்களில் நீர் ஓடத் தொடங்கியது. ''கோவிந்தன் எண்டு ஆமி சுட்டு செத்தெட்டாங்கள், அது உண்ட அப்பாவா? ரீச்சர் அவனது நிலையறியாமல் மீண்டும் கேட்டார் அந்தச் சிறுவனின் அழியாத கவலை புதுப்பிக்கப்பட்டது. அப்பா... எட்டிப் பிடிக்க முயன்ற ரீச்சரின் கையையையும் தட்டியபடி அகதி முகாமை நோக்கி ஓடத் தொடங்கினான்.

★ ★

முகாமில், தாய் வலையில் இருந்த சிறுசிறு ஓட்டைகளைத் தைத்த வண்ணமிருந்தாள். மணியின் முகத்தை அவதானித்த தாய், ''என்னடா ஒரு மாதிரியாய் வாறாய்...... வா, ரொட்டி சுட்டு வைச்சிருக்கிறன்; காலமையும் வெறு வயித்தோடை போனனி'' என்று மணியைக் கூட்டிச் சென்றாள்.

ரொட்டித்துண்டைஎடுத்து ஒருகடிகடித்தமணி, ''அம்மா, நான் இனிமேல் பள்ளிக்கூடம் போகமாட்டன். ரீச்சர் என்னை கொப்பி, பெஸ்சில் கொண்டு வராமல் வரப்படாது எண்டு சொல்லிப் பேசிப் போட்டா. ''அப்பா இருந்தாலாவது வாங்கித் தருவார்'' அவனது கையிலிருந்த ரொட்டித்துண்டு நழுவியது. விம்மத் தொடங்கினான்.

நான் நாளையிலை இருந்து அப்பா செய்த கடற்றொழில் செய்யப் போகப் போறன்... பிரச்சினை தீர்ந்து காரை நகருக்குப் போனபிறகுவேணுமெண்டா எங்கடை பள்ளிக்கூடத்திலை படிக்கப் போறன்...... இப்போதும் தாயின் கண்களிலிருந்து முத்து முத்தாய் நீர்த்துளிகள் விழுந்து தெறித்தன.

வட இலங்கை தொழில்நுட்ப கல்லூரியின்

# கணணி-இலத்திரனியல்-மனையியல் கண்காட்சி

9-9-94-ம் 10-9-94-ம்

அன்பளிப்பு ரூபா 10/- ரூபா 5/-

# NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, சென்பீற்றர்ஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(சி-10284)

---

பார்புகழும் தீவகம் நாரந்தனை
செல்வா நாடக மன்றக்கலைஞர்கள்
பெருமையுடன் அளிக்கும்

# கருங்குயில் குன்றத்தில் கொலை

(வரலாற்று தென்மோடி நாட்டுக்கூத்து)

இடம்:- அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்

(அமரர் விஸ்வநாதன் அரங்கு)

காலம்:- 09-09-1994 வெள்ளி இரவு 8-00 மணி

நற்றமிழ் நாட்டுக்கூத்து ரசிக மக்கள் அனைவரையும் வருக வருகவென அன்புடன் அழைக்கின்றோம்.

நாரந்தனை செல்வா நாடகமன்ற
நிர்வாகிகள்

(9332)

---

## போட்டோ அல்பம் இனாம்

- கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்.
- போட்டோ பிளேற் (PHOTO PLATE) கலர் படங்களை கோப்பைகளில் பதித்தல். (சாம்பிள் பார்வையிடலாம்)
- கொம்யூட்டர் றபர்சீல் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)
- லயின், காவ்ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)
- புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY) மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# (!) கொழும்பு கலைக்கூடம் (!)

(கொழும்பு ஸ்ருடியோ)

55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.

தொழில்நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

(சி-10219)

---

# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

VADDUKODDAI

Advanced Diploma in Computing
Computer Programming & Data Processing
Technician Diploma
Draughtsmanship

மேற்குறிப்பிட்ட பாட நெறிகள் ஆரம்பமாகி விட்டன. ஒரு சில வெற்றிடங்கள் இருப்பதனால் இம் மாதம் 14-ம் திகதிக்கு முன் சேர்வதற்கு வாய்ப்புண்டு

நேரில் விண்ணப்பிக்கவும்.

DIRECTOR
J. C. I. T.

Vaddukoddai (சி-10292)

---

2-ம் லெப்டினன்ட் மாலதி நினைவார்த்த

# கட்டுரைப் போட்டி

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பெண்புலி 2-ம் லெப். மாலதி அவர்களின் நினைவுநாளை முன்னிட்டு, விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் தமிழீழ மக்களிடையே கட்டுரைப் போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

கட்டுரைகள் கீழ்க் காணும் தலைப்புகளில் ஒன்றின் கீழ் எழுதப்படவேண்டும்

## தலைப்புகள்

அ. நாடுகளின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு

ஆ. தமிழீழ விடுதலைப் போராட்டமும், தமிழீழப் பெண்களின் எழுச்சியும்

இ. புதிய உலகில் பரவிவரும் பெண்ணிய அலைகள்

ஈ. பெண்களின் அடிப்படையான பலம் எது?

## போட்டிக்கான விதிமுறைகள்

அ. கட்டுரைகள் 2,000 - 2500 சொற்களுக்கு இடைப்பட்டதாக அமைய வேண்டும்

ஆ. கட்டுரைகள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்படவேண்டும்-

இ. கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகள் யாவும் பெண்களின் மேம்பாட்டை உள்ளடக்கியதாக எழுதப்படவேண்டும்.

ஈ. எமக்கு அனுப்பப்படும் கட்டுரைகள் ஏற்கனவே பிரசுரமாகவில்லை என்பதையும், வெளியிடும் நோக்கில் இதுவரை யாருக்கும் அனுப்பப்படவில்லை என்பதையும் அந்தந்தக் கிராமங்களுக்குரிய கிராம சேவகர்களோ, அண்மையிலுள்ள சனசமூக நிலைய நிர்வாகிகளோ உறுதி செய்யவேண்டும்.

உ. எழுதுபவரின் பெயர், முகவரி, வயது என்பன தனியே ஒரு தாளில் எழுதி, கட்டுரையுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும்.

ஊ. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் '2ஆம் லெப். மாலதி நினைவையொட்டிய கட்டுரைப் போட்டி' என்று குறிப்பிடப்படவேண்டும்.

எ. படைப்புகள் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்:
வெளியீட்டுப்பிரிவு, விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு, கோண்டாவில்.

ஏ. போட்டி முடிவு நாள் 1994-09-30

ஐ. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது-

(சி-10296)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்:
24- 3- 78

★ ★

மண்ணுக்காக:
27- 7- 94



முல்லைக் கடலில் ஏற்பட்ட விபத்தில் வீரச்சாவு அடைந்த இளம் வேங்கை

### ஜெனார்த்தனன்
### (சேனாதி சசிக்குமார்)

இளங் கன்றே சசிக்குமார்
எம் இன்னுயிரே.
ஈழத்து மண்ணையும் மக்களையும் காக்க என்று
ஓடினாய் முல்லைக்கு அன்று
முல்லைக் கடல்தனிலே பயிற்சி எடுக்கும்
வேளையிலே வீரமூச் செறிந்தாயே
வீட்டினிலே இளையவனாய்
நாட்டின் சேவையிலே பெரியவனாய்
தன்னலம் பேணாது உயிரை துச்சமென
நினைத்த உன் தியாகத்தை
நினைத்து வருந்துகின்றாள் நின் அன்னை
இந் 45ஆம் நாள்தனிலே.

9- 9- 94 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் சக போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பிளாக் வீதி,
சங்கானை.

உனது பிரிவால் வாடும்
தாய், தந்தை, அண்ணன்.

(9330)

# வேரற்ற மக்களின் வேதனை இலக்கியப்!

புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழன் 'புலம்பெயர்ந்த இலக்கியம்' என்ற புதியதொரு இலக்கியக் கூறு வெளிவருவதற்கு காரணமாகியிருக்கின்றான்.

83ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஈழத்திலிருந்து பெருந்தொகையான தமிழர்-குறிப்பாக இளைஞர் மேற்கு நாடுகளை நோக்கிப் படையெடுத்தனர் [கனடா] [ஜெர்மனி, பிரான்ஸ், நோர்வே டென்மார்க் சுவிஸர்லாந்து நெதர்லாந்து, பிரிட்டன்ஆகிய நாடுகளை நோக்கியே பலர் சென்றனர்.

> மன அழுத்தங்களின் வடிகாலாகவே இக் கலை, இலக்கியப் படையல் பற்றி பலரும் வாதிடுகின்றனர். வேரற்று . . . முகமற்று வேதனை வாழ்வின்உச்சத்தில் விரக்தியாகப் பேசவும், எழுதவும் செய்கின்றார்கள் . . .

சிறிலங்கா-இந்திய இராணுவங்களின் கொடூரங்கள் ஈழத்தில் மலிந்திருந்த காலகட்டத்தில் இந்த புலம்பெயர்வு நடைபெற்றதால், மேற்குலகில் தம்மை அரசியல் அகதிகளாக பதிவு செய்து கொள்ள வாய்ப்பாகப் போனது.

எண்பதுகளில் தேசிய ஒடுக்குமுறை பற்றிய அநுபவங்கள் ஈழத்து இலக்கியமாக மலரத்தொடங்கின உள்ளடக்கம் புதிதாக முளைவிடத் தொடங்கியது.

சிறுகதையாக, கவிதையாக நாவலாக ஈழத்து இலக்கியம், புதிய பிரச்சினைகளைப் பேசத்தொடங்கியது.

'புலம்பெயர்ந்தஇலக்கியம்' சொல்லும் செய்தி என்ன என்று ஆராய்வது இங்கு பொருத்தப்பாடானதாக இருக்கும்.

புலம்பெயர்ந்த ஒரு மக்கள் கூட்டம் கலை, இலக்கியங்களில் எதை முதன்மைப்படுத்துகின்றது?

முதலில் புலம்பெயர்ந்தவர்களைப் பற்றி சில அடிப்படை விஷயங்கள் தெரிந்து வைத்திருப்பது சிறப்பானது.

இராணுவ அச்சத்தினால் புலம்பெயர்ந்தவர்களைவிட, செல்வம் திரட்டும் நோக்குடன் மேற்குலகிற்கு பாய்ந்தவர்களே அதிகம் பல இளைஞர்கள் மனம் விரும்பாமல் பெற்றோர்களின் நிர்ப்பந்தத்தினால் சென்றுள்ளனர்.

இவர்கள் மாறுபட்ட சூழலில் வாழ்வை நகர்த்தும் அவலம் நிலவுகின்றது வேற்றுக் கலாசாரம், அந்நிய மொழிகளின் சினேகம் வித்தியாசப்படும் காலநிலை-

இவை கொடுமையானவை இவற்றைவிடக் கொடுமையானவை சொந்த மண்ணைப் பற்றிய ஞாபகம் சுற்றிச் சுதந்திரமாகத் திரிந்த தேசம் எட்டாத் தூரம், ஊருக்கு வர வேண்டாம் என்னும் பெற்றோர்களின் கடிதம் தரும் கண்ணீர் சேரமுடியாத தூரத்தில் உறவுகள்...

புலம்பெயர்ந்த தமிழன் இருள் வாழ்விற்குள் புதைந்து போயுள்ளான் கலை, இலக்கியங்கள் இவர்களின் வெளிச்சக் கீற்றாக மின்னிக் கொண்டிருக்கின்றன,

பத்திரிகைகள், சஞ்சிகைகள் (சிற்றிதழ்) நூல்கள் பல இவர்களால் வெளியிடப்படுகின்றன.

புலம்பெயர்ந்த இலக்கியத்தில் நவீன இலக்கியத்தின் சகல வடிவங்களும் கையாளப்படுகின்றன.

கடந்த வருடம் (மே) அவுஸ்திரேலியா நகர் சிட்னியில் புலம்பெயர்ந்த ஈழத் தமிழரால் பாரதி விழா நடாத்தப்பட்டது.

தமது மன அழுத்தங்களின் வடிகாலாகவே இக் கலை இலக்கியப்படையல் பற்றி பலரும் வாதிடுகின்றனர்; புலம்பெயர்ந்தவர்களால் உலகெங்கும் தமிழை எடுத்துச் செல்ல முடிகிறது என்றும் ஒரு நியாயம் கற்பிக்கப்படுகின்றது.

சொந்த அடையாளங்கள் மறையும் நிலையில், தாய் மொழி, கலாசாரம் கருகும் நிலையில் இவர்கள் புதிய இலக்கியப்புரட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

பிரெஞ்சு, ஜெர்மன், கனடிய பாஷைகளை இவர்கள் குழந்தைகள் உச்சரிப்பது இவர்கள் மனதில் சோக அலை எழவைக்கின்றது.

ஒரு தசாப்த காலமாக புலம்பெயர்ந்தவர்கள் இலக்கிய சிருஷ்டிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றபோதும் சமீப காலத்தில் தான் தமிழ் இலக்கியத்தின் ஒரு கூறாக இவர்கள் இலக்கியம் பற்றி பேச்சு கேட்கின்றது.

தமது பிரசவங்களில் தாம் புலம் பெயர்ந்ததற்கான நியாயங்களே விரவிக்கிடக்கின்றன

இந்த நாடுகளில்வாழும் ஈழத்தமிழர்களில் ஒரு சிறிய பிரிவினர் - போராட்டத்திற்கு எதிரான - - விரோதமான கருத்துக்களை தமது படைப்

**வவுனியா திலீபன்**

புகளில் திணித்து வருகின்றனர். இந்த மண்ணில் பெரும்பாலும் சமூகவிரோத நடவடிக்கையில் ஈடுபட்ட இவர்கள் அங்கும் கேவலமான செயல்களில் ஈடுபட்டுக் கொண்டு, ஈழப்போரை கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

புலம் பெயந்தவர்கள் உலகெங்கும் தமிழைப் பரப்பிக் கொண்டிருக்கலாம். ஆனால் -இவர்களில் ஒரு பிரிவினர்- தாய் மொழியை, கலாசாரத்தை குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

வேரற்று. முகமற்று வேதனை வாழ்வின் உச்சத்தில் விரக்தியாக பேசவும், எழுதவும் செய்கின்றார்கள். ஆனால், போராட்டம் நடைபெறும் பூமி இங்கேதான் உள்ளது. போராட்ட இலக்கியம்இங்கே தான் உயிர்ப்புடன் படைக்க முடியும். அதற்கான உள்ளடக்கம் ஈழத்திலே தான் உள்ளது.

புலம் பெயர்ந்தவர்கள் தமது ஆக்க இலக்கியங்களில் நாளாந்த வாழ்வின் சிக்கல்களைச்சொல்லலாம். அந்நிய தேசத்தில் எழும் நிர்ப்பந்தங்களைச் சொல்லலாம்.

இவர்களின் சமீபத்து படைப்புகளில் முரண்களும், முகவரியற்ற ஜீவிதமும் தான் வெளிப்படுகின்றன.

புலம் பெயர்ந்த இலக்கியம் தமிழ் இலக்கியத்தில் புதியது என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. வேரற்ற ஒரு மக்கள் கூட்டத்தின் வேதனைகளைச் சொல்லும் இலக்கியம் இது

# நானூறு ஆண்டுகளாக ஒளி வீசும் மோனாலிஸா - ஓர் கலைப் பொக்கிஷம்

ஓவிய உலகில் இன்று அற்புத கலைப்பொக்கிஷமாகக் கருதப்பட்டு வருவது மோனாலிஸா ஓவியம் தான். அந்த ஓவியத்தில் உள்ள பெண்ணின் புன்முறுவலுக்கு ஈடு இணையே கிடையாது என்கிறார்கள். நான்கு நூற்றாண்டுகளாக ஓர் ஓவியத்தைப் பற்றிய பேச்சு இருந்து கொண்டே இருக்கிறது என்றால் அது சுவாரசியமான விடயந்தான்! மோனாலிஸா ஓவியம் இருப்பது பாரீஸுக்கே பெருமையளிக்கிற விஷயம்.

ஒரு தடவை, மோனாலிஸா ஓவியம் ஐக்கிய அமெரிக்காவில் காட்சிக்காக வைப்பதற்கு அனுப்பப்பட்டது. காட்சி முடிந்ததும் அதைத் திருப்பி அனுப்பினார்கள். அப்படித் திருப்பி அனுப்பப்பட்ட ஓவியத்தை, பாரீஸில் லூவர் மியூஸியத்தில் துப்பாக்கிக் குண்டுகள் துளைக்க முடியாத கண்ணாடிக்குப் பின்னே சுவரில் பொருத்தினார்கள். பொருத்துவதற்கு முன் ஓவியத்தின் ஒவ்வொரு சென்றிமீற்றரையும் எக்ஸ்-ரே எடுத்தும். உருப்பெருக்கும் மைக்ராஸ் கோப்பின் மூலமும் நன்கு பரிசோதித்தார்கள். ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்று திரும்பியதில் இந்த மோனாலிஸா ஓவியம் சிறிதும் பழுதுபடவில்லை என்று அறிக்கை தயாரித்தார்கள்.

பாரீஸில் மிக உயர்ந்த ஐபல் கோபுரம் போல் மோனாலிஸா ஓவியமும் ஒரு தேசிய சின்னமாக ஆகிவிட்டது. ஐபல் கோபுரத்தைப் பார்க்க வருகிறவர்களின் எண்ணிக்கையின் அளவுக்கு இந்த ஓவியத்தையும் பார்க்க வருகிறார்கள்.

'மோனாலிஸா' என்பது ஒரு திறமையான ஓவியமேதையின் மிகச் சிறந்த கலைப் படைப்பு என்று சொல்லி விட முடியாது; லூவர் மியூஸியத்தில் இதைப் போன்று நூற்றுக்கணக்கான கலைப்படைப்புக்கள் உள்ளன என்கின்றார்கள் கலைவிமர்சகர்கள். ஆனாலும் மோனாலிஸா ஓவியம், பாடல்கள், கவிதைகள், இசைச்சாலைகள், புத்தகங்கள் முதலிய எல்லாவற்றிலும் இடம் பெற்றுவிட்டது.

**தொகுப்பு**
**க. குணசீலன்**

இந்த ஓவியத்தில், வரையும் போது ஏற்படக்கூடிய மிக மெல்லிய பிரஷ்கோடுகள் கூட தெரியவில்லை. எக்ஸ்ரேயில் கூட அந்தக் கோடுகளைக் காண முடியாது என்கிறார்கள்.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு தீட்டப்பட்ட இந்த ஓவியத்தின் அளவு 30 அங்குலம் உயரம்; 21 அங்குலம் அகலம்.

ஓவியத்தில் இடம்பெற்றுள்ளமோனாலிஸாவைப்பற்றி அதிகமாக ஒருவருக்கும் தெரியாது. அவள், லிஸாகெரார்டினியில் பிறந்தவள் இத்தாலி நாட்டின் புளோரன்டைன் நகரத்தில், ஓவியக் கலைஞர்களுக்கு 'மாடல்' பெண்ணாக இருந்தாள். இளமையில் வறுமையால் வாடிக் கொண்டிருந்த அவளை, 'பிரான்ஸிஸ் கோ-லா-கியோ சொண்டா' என்னும் வியாபாரி தன் மூன்றாவது மனைவியாக மணந்து கொண்டான். அப்போதுஅவளுக்குவயது இருபது.

தன்னுடைய இளம் மனைவியை ஓவியமாக்கிவிட வேண்டும் என்று விரும்பினான் அந்த வியாபாரி.

அவன் அப்போது பிரபலமாகியிருந்த ஓவியர் லியோனார் டோடா வின்ஸியிடம் அவளை ஓவியமாகத் தீட்டித் தருமாறு கேட்டுக்கொண்டான். அவரும் சம்மதித்தார்.

ஓவியம் வரைந்து முடிக்க 1503 முதல் 1507 வரை, 4 ஆண்டுகள் ஆயின. அந்த 4 ஆண்டுகள் அவள் 'மாடல்'லாக இருந்தாள்.

இந்த ஓவியம் வரைவதற்கு அந்த வியாபாரி, ஓவியருக்குப் பணம் கொடுத்தாரா, அல்லது வரைந்து முடித்த பிறகு. இந்த ஓவியம் அவரிடம் கொடுக்கப்பட்டதா என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

அநேக ஆண்டுகள் இந்த ஓவியத்திற்கு 'மோனாலிஸா' என்னும் பெயர் வைக்கப்படாவில்லை லியோனார்டோடா வின்ஸியின் சீடர்கள் இந்தஓவியத்தையே, ஒரு சில மாறுதல்களுடன் சுமார் 30 ஓவியங்களாவது வரைந்திருப்பார்கள்.

லியோனார்டோ பல ஓவியங்களை வரைந்திருந்தாலும் தன்னுடன விரும்பி வைத்துக் கொண்டிருந்த ஓவியம் மோனாலிஸா தான். ஒரு சமயம், அவர் இத்தாலியில் வாழ்க்கையை வெறுத்து, பிரான்ஸுக்குச்சென்றபோது இந்த ஓவியத்தை எடுத்துச் சென்றார். அப்போது முதலாம் பிரான்ஸில் என்னும் சக்கரவர்த்தி இந்த ஓவியத்தை அவரிடம் விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்.

அப்போது முதல், இந்த ஓவியம் பிரான்ஸிலேயே தங்கிவிட்டது. ஆனால் இடையில் சில காலம் 'வின்சென்ஸோ பெருகியா' என்னும் இத்தாலியகல் தச்சன் ஒருவன் அதைத் திருடிக் கொண்டு போய் 5 லட்சம் தங்க பிராங்குகளுக்கு விற்க முயன்றான். ஆனால் அவன் பிடிபட்டுவிட்டான். ஓவியம் பிரான்ஸிலுள்ள கலைக்கூடத்திற்கு திரும்பிவிட்டது.

இந்த ஓவியம் காணாமல் போன சமயத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த ஆறு பேர்கள். இதன் ஆறு போலிப் பிரதிகளை 'ஒறிஜினல்' என்று நினைத்து 3 லட்சம் டாலர்கள் கொடுத்து வாங்கிவிட்டார்கள்.

இந்த ஓவியம் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டபோது ஐந்து வாரங்கள் செலவழித்து ரப்பர் தகடுகளை வைத்து ஓர் உலோகப் பெட்டிக்குள் பாதுகாப்பாகவைத்தார்கள். இது எப்போதும் 20 டிகிரி சென்டிகிரேட் உஷ்ண நிலையிலேயே இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்பட்டது. இதைக் கொண்டு போய்ச் சேர்க்கும் வரையில் இதன் கூடவே துப்பறியும் நிபுணர்களும், மோட்டார்சைக்கிளில் பொலிஸ்காரர்களும் இதற்குக் காவலாக சென்றார்கள்! ஆறு காவல்காரர்கள் இதை இரவு பகலுமாக மாறி மாறி காவல் புரிந்தார்கள்.

ஓவியம் இருந்த அறையின் இரு பக்கங்களிலும் பிரெஞ்சு மியூசியத்தின் டைரக்டரும், லூவர் மியூசியத்தின் கண்காணிப்பாளர் ஒருவரும் அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

நியூயார்க்கிலிருந்து வாஷிங்டனுக்கு இதைக் கொண்டு போகும்போது ஆயுதப்படையினர்காவல் புரிந்து கொண்டு சென்றார்கள். போக்குவரத்தே இதற்காக ஒழுங்கு செய்யப்பட்டது.

வாஷிங்டன் நகரில், தேசியக் கலைக்கூடத்தில் இந்த ஓவியம் ஒரே சீதோஷ்ண நிலையில் இருக்க ஏர்கண்டிஷன் செய்யப்பட்டது. அதற்கென்று தனிப்பட்ட ஜெனரேட்டர்கள் பொருத்தப்பட்டன.

கலைக்கூடம் திறக்கப்பட்ட தினத்தன்று சுமார் 2000 பேர் இதைப்பார்க்க வந்தார்கள். கண்காட்சி ஆரம்பித்து 27-வது நாள் மட்டும் 61,305 பேர் கண்டு களித்தார்கள்,

எழுத்தாளர் ஆஸ்கார் வைல்ட், இந்த மோனாலிஸாவின் புன்னகையைப் பற்றி இப்படி வர்ணித்திருக்கிறார்:

''வக்கிரமாக, மகிழ்ச்சியாக குறும்புத்தனமாக, செயற்கையாக இயற்கையாக, இயற்கைக்கு முரணாக, புத்திக் கூர்மையுள்ள, இரக்கம், கசிந்த பைத்தியக்காரத்தனமாக, அகங்காரமிக்க, மர்மமான, கவர்ச்சியான மனத்தைக் குழப்பத்தில் ஆழ்த்தும் தன்மைமிக்க மாயா ஜாலங்கள் நிறைந்த- ஆனால் மறக்க முடியாத புன்னகை.''

பிரான்ஸ் நாட்டு வியாபாரிகள், வாசனைத்திரவியங்கள், மதுபான வகைகள், காலுறைகள் ஆரஞ்சுப்பழங்கள் பாலாடைக் கட்டிகள் முதலிய பொருள்களுக்கெல்லாம் 'மோனாலிஸா' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

# பம்பாய் குண்டு

பாதுகாத்துக் கொண்டிருந்தது. இதன் மூலம், பம்பாய் குண்டுவெடிப்புக்களில் பாகிஸ்தானின் வலுவான பின்னணி இருப்பதை சி. பி ஐ. உணர்ந்திருந்தும், நேரடியானஆதாரங்களை அதனால் தெளிவாக காட்டமுடியவில்லை.

உலகில் அதிவேகமாக பரவிவரும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் ஒரு பகுதியே இந்த குண்டு வெடிப்புக்கள் எனக் காட்டுவதன் மூலம் பாகிஸ்தானை நேரடியாக குற்றஞ்சாட்டவும் வாய்ப்புக் கிடைக்கலாம் என சி.பி.ஐ. எதிர்பார்த்தது.

இதன் ஒரு கட்டமாக நியூயோர்க் வர்த்தக மையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களையும், பம்பாய் குண்டுவெடிப்புக்களையும் பல வகையில் ஒற்றுமைப்படுத்திக் காட்ட முனைந்தது சி.பி ஐ இங்கும் நேரடியான ஆதாரங்கள் அதற்கு பெரிதாக கிடைக்கவில்லை. வெறும் தகவல்களே அதற்கு உதவின.

சி.பி. ஐ. யின் விசாரணைகளின் போக்கில், உஸ்மான் கனி என்னும் தாவூத் இப்ராஹிமின் நெருங்கிய சகா கைது செய்யப்பட்டதும், தாவூத்தின் மீதான குற்றச் சாட்டுக்களை நிருபிக்க உஸ்மான்கனியை பாவிக்க சி.பி. ஐ. முனைந்தது. அயோத்தி சம்பவத்தின் பின் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு, தாவூத் பழிவாங்க விரும்பியே இவ்வாறான குண்டு வெடிப்புக்களை மேற்கொள்ள வெடிமருந்துகளை பாகிஸ்தானிலிருந்து கொண்டு வந்தார் என உஸ்மான் கனி கூறியதை சி-பி-ஐ, பிரதான வாக்குமூலமாக கொண்டது-

இந்த நிலையிலேயே, பம்பாய் குண்டுவெடிப்புகளின் விசாரணைகளில் முக்கிய திருப்பத்தை உண்டு பண்ணிய யாகூப்மெமனின் கைது நடைபெற்றது. இந்தியாவிலேயே மிகத் தீவிரமாக தேடப்படும் நபர், டில்லி ரயில் நிலையத்தில் வைத்து சாதாரண பிக்பொக்கட் திருடன் போல வெகு இலகுவாக கைது செய்யப்பட்டார் என சி.பி ஐ.அறிவித்தது, யாரிடமிருந்தோ கிடைத்த தொலைபேசி தகவல் மூலம் யாகூப் மெமன் இவ்வளவு சுலபமாக கைது செய்யப்பட்டார். எனும் தகவல் யாகூப்மெமன் அளித்த தொலைக்காட்சி பேட்டியொன்றின் மூலம் பொய்யாக்கப்பட்டது,

தன்னைப்பற்றிய முழு விபரங்களையும், தனது பாடசாலைச் சான்றிதழ்கள் உட்பட அனைத்தையும், நாடுபூராவும் தேடப்படும் முக்கிய நபர் ஒருவர் எப்போதும் தன்னிடம் வைத்துக் கொண்டிருப்பாரா? சி பி. ஐ, சுற்றிய பூச்சுத்தலில், யதார்த்தத்துக்கு பொருந்தாத பகுதிகளில் இதுவும் ஒன்று-

யாகூப் மெமனின் தொலைக்காட்சிப் பேட்டியின்படி, இந்தியாவுக்கு திரும்புவது பற்றி தனது வழக்கறிஞர் ஒருவரிடம் கலந்தாலோசிக்கவென நேபாளத் .தலைநகர் காட்மண்டுவுக்கு தான் சென்றதாகவும், அவரின் ஆலோசனையின்படி' பாகிஸ்தானுக்கு மீண்டும் திரும்ப, காட்மண்டுவிலிருந்த விமான நிலையத்துக்கு சென்றபோது இன்ரர்போல் அதிகாரிகள் தன்னைப் பிடித்து நேபாள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர் என்றும் அவர்கள் இந்திய அதிகாரிகளிடம் ஜூலை 28-ந் திகதியன்று தான் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்

ஆனால் சிபிஐ, தமது வாதத்திலேயே உறுதியாக ஒகஸ்ட் 5ஆந் திகதியே மெமன் டில்லியிலேயே கைது செய்யப்பட்டார் என பிடிவாதமாக நின்றது.

நேபாளத்தில் வைத்து. யாகூப் மெமன் கைது செய்யப்பட்டார்என்பதை சி.பி ஐ ஒத்துக் கொள்வதற்கு பல வகையிலும் காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, நேபாளத்தில் பிடிக்கப்பட்ட யாகூப் மெமன், இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட விடயம் நேபாள பிரதமர் கொய்ராலாவுக்கு, விரைவில் வரப்போகும் தேர்தலில் பாதிப்பைத் தரலாம் என்பது இன்னொன்று. தங்கள் கையாலேயே மெமன் பிடிக்கப்பட்டார் என்ற சந்தோசத்தை மக்களுக்குத் தந்து மக்களுக்கு, சி பி ஐயின் மேலிருக்கும் மதிப்பை உயர்த்துவது என்பனவாகும்.

யாகூப் மெமன் சி. பி. ஐ. யிடம் மாட்டிக் கொள்ள தற்செயலாக நேர்ந்ததா இல்லை கைதாக வேண்டுமென்றே வெளிப்படையாக காட்மண்டுவில் உலாவினாரா என்ற சர்ச்சையும் சி. பி. ஐயினுள் எழுந்திருக்கிறது.

பாகிஸ்தான் பிரதமர் பெனசீரின் அரசியல் எதிரியான நவாஸ் செரீப்பை காட்டிக் கொடுத்து. அதன் மூலம் உள்நாட்டினுள் தனது எதிரிக்கு தலைகுனிவை ஏற்படுத்த பெனசீரே மெமனை இந்தியாவிடம் செல்லும்படி அனுப்பினார் என்று கூட சந்தேகம் சி.பி ஐக்குள் எழுந்துள்ளது.

இதற்கு, குண்டுவெடிப்பில் பாகிஸ்தானுக்கு தொடர்பிருக்கிறது, இந்தியாவின் புளுகு மூட்டைகளில் இதுவும் ஒன்று என பெனசீர் அடித்துச் சொல்லியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

அது எப்படியிருப்பினும், சி பி ஐ, தான் கற்பனை செய்துள்ள இலக்குகளையே வழக்கு தொடவேண்டும் என்பதற்காக, தாவூத் இப்ராஹிம், மெமன் சகோதரர்கள் பாகிஸ்தான் என தன் குறிகளைக் கொண்டுள்ளது. பிரதான குற்றவாளி என சி.பி.ஐ கருதும் தாவூத் இப்ராஹிம் துபாயில் வைத்து. இந்தியாருடே பத்திரிகைக்குக் கூறியபடி, என்னை இவ்வழக்கில் சம்பந்தப்படுத்துவதற்குக் காரணம் நான் ஒரு முஸ்லிம், ஒரு தெருக் கூட்டும் முஸ்லிம் புகழ் பெற்றாலும் கூட அவர்கள் சகித்துக் கொள்ள மாட்டார் எனக் கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சி.பி ஐயினதோ, இந்திய அரசினதோ விசாரணைகள் பொய்ச்சாட்சியங்களைக் கொண்டு உருவானவை. ஏதாவது மூன்றாவது தேசத்தில் தான் என்னை விசாரிக்க வேண்டும் என தாவூத் இப்ராஹிம் கூறியிருப்பதும் சி.பி.ஐ யின் நோக்கை தெளிவாக காட்டுகின்றது

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
20-04-1975

வீரச்சாவு
09-09-1993

**2-ம் லெப். பனம்பாரன்**
**(தங்கராஜா சதீஸ்வரன்)**

புலிப்படையின் வேவு வீரனாகி
மரணத்தில் விதையாகி
பூநகரியில் சரித்திரம் படைத்து
மானத்தோடு நீ நிமிர்ந்தாய்
புதுஈழம் படைக்க வென்று
மறவன் நீ சென்றாயோ
பூவுலகில் உன்னத சரித்திரம் படைத்து
மானங்காத்து மடிந்தாயே.

204, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(9334)

---

## 45-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



**மாவீரன் கப்டன் கலைஞன்**
**(குணவீரசிங்கம் மதனகுமார்)**
**[பிப்ரி கலைஞன்]**
**[சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி]**

மடியிலே முத்தாக: 13-01-75
மண்ணிலே வித்தாக: 28-07-94

தமிழ்ஈழ மக்களின் தனிப்பெருந் தலைவனின் விடுதலை வேள்வியில் போராளியாகப் புகுந்து நான்கு ஆண்டுகளில் களம் பல கண்டு, வென்று சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் ஒப்பற்ற வீரனாய் திகழ்ந்து ''பிப்ரிக் கலைஞன்'' என சகதோழர்களால் அழைக்கப்பட்டு, மண்டைதீவு இராணுவத்துடனான நேரடி மோதலில் மார்பிலே குண்டினை ஏந்தி வித்தாகினாய்

28-07-94-ல் வீரசுவர்க்கம் அடைந்த எமது அன்பு மகனின் ஆத்ம சாந்தி கிரியைகள் 09-09-94 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள், ஏனைய மாவீரர் குடும்பத்தினர் அனைவரையும் இன்று காலை (9-9-94) 10.00 மணிக்கு நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்க தமிழீழம்

மணல் வீதி,
மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.
(9337)


கலைஞனின் அப்பா-ந. குணவீரசிங்கம்
அம்மா-கு. செல்லாச்சிப்பிள்ளை
மற்றும் சகோதரங்களும்
குடும்ப உறவினர்களும்.

---

## 3-ம் ஆண்டு நினைவலைகள்



**வீரவேங்கை திலீப்**
**(மார்க்கண்டு இளங்கிரன்)**
பிறப்பு - 25.05.1972
வீரச்சாவு - 09.09.1991



**2-ம் லெப்டினன்ட் நேசன்**
**(சிவநேசன் சிவசங்கர்)**
பிறப்பு - 24.01.1977
வீரச்சாவு - 09.09.1991

உங்களின் தியாகம் உன்னதமானது.
தேசம் மலர உரமானது.
ஈழத்தின் விடியலை விரும்பியவர்களே.
விரைவில் உங்கள் தாகம் தீரும்.

- சகபோராளிகள்

(9331)

போதசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளைநூலகம்



# அரசியல்வாதிகளின் தொலைபேசி; ஒட்டுக்கேட்கும் மோசடி அம்பலம்

(கொழும்பு)

முக்கிய அரசியல் வாதிகளின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்கும் நீண்டகால மோசடி ஒன்று அம்பலமாகியுள்ளது. கொழும்பிலுள்ள இரகசியத் தகவல நிலையம் ஒன்று இதைச் செய்து வந்துள்ளது ஒரேதடவையில் பல தொலைபேசிகளையும் ஒட்டுக் கேட்கும் நவீன சாதனமும் இந் நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச் சாதனம் பிரான்ஸ் நாட்டின் தயாரிப்பு எனவும் தெரியவருகிறது.

முன்னாள் ஜனாதிபதிக்கெதிராக தேசவிரோத குற்றச்சாட்டுப் பிரேரணை கொண்டு வரப்பட்ட காலத்திலேயே, இந்த உபகரணங்கள் தருவிக்கப்பட்டன என்று தபால் தொலை தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அரசியல் வாதிகளின் உரையாடல்களை ஒட்டுக் கேட்பதற்கு இவ் உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டன முன்னாள் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சரின் அனுமதியுடனேயே இவ் வுபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னரும் தற்போதைய அமைச்சர்களின் உரையாடல்களையும் ஒட்டுக் கேட்க இவ்வுபகரணம் பயன்படுத்தப்பட்டது இது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும்அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## பொது அறிவுத் தேர்வு

கல்வி மேம்பாட்டுக் கழக ஆசிரியர்களுக்கான மாதிரி பொது உளச்சார்பு, பொது அறிவுத் தேர்வு முன்னர் அறிவித்தபடி யாழ் நல்லூர் கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும் சாவகச்சேரி கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்திலும் நாளை (சனிக்கிழமை முற்பகல் 9. 30 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என சம்பந்தப்பட்ட கல்விக்கோட்டங்களின் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

## விசாரணை

தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து விசாரணைக்குழுக்களை நியமிப்பதில் ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தைப் போன்று, பிரதமருக்கும் அதிகாரம் அளிப்பது என அமைச்சரவை முடிவு எடுத்துள்ளது இதற்கேற்ற வகையில் சட்டம் திருத்தப்படும்என அவர் மேலும் கூறினார்.

## எரிகாயங்களால் மரணம்

(யாழ்ப்பாணம்)

தும்பளைப் பகுதியைச் சேர்ந்த பாலசரஸ்வதி (வயது 44) என்பவர் எரிகாயங்களிற்கு உள்ளாகி சென்ற திங்கட்கிழமை யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் மரணமானார்.

இவரது உடல் மரணவிசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (88)

## அம்மாளைக் கும்பிடுகிறானுகள்...!

15 சிறுகதைகளின் தொகுதி
இந்தியப்படையின் இருண்ட நாட்களின்
அவலங்களையும் - சோகங்களையும்
வெளிக்காட்டுகிற
உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு



இது தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவின் உருவாக்கம்.

எல்லாப் புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

அன்பளிப்பு : ரூபா 50

(சி/ 10295)

## கண்ணீர் அஞ்சலி
### திருமதி தம்பு இராசம்மா

இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபர் திரு. த. வரதராசன் அவர்களின் பேர்த்தியார் திருமதி தம்பு இராசம்மா சிவப்பேறு எய்தியமை குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலியையும் அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
ஆசிரியர்களும், அலுவலர்களும்

(சி-10304)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் யாழ். மாவட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி இன்று 1.30 மணி முதல் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் சங்கத்தலைவர் டாக்டர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா தலைமையில் ஆரம்பமாகும். இப்போட்டிகள் நாளை மறுதினம்ஞாயிற்றுக்கிழமைவரை தினமும் பிற்பகல் 1.30 மணி முதல் தொடர்ந்து நடைபெறும்.

## செப். 26 பொது விடுமுறை

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னைய பிரதமர் எஸ் டபிள்யுஆர். டி பண்டார நாயக்கா இறந்த செப்ரெம்பர் 26-ம் திகதியை பொது விடுமுறையாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

## சுகாதார

சிலுவை சங்கத்தின் மத்தியஸ்தத்தை நாடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார், யாழ். வைத்தியசாலைகளுக்கான தேவைகளை அறிந்து உதவவும், ஒய்வுபெற்ற வைத்தியர்களை தொடர்ந்து சேவையாற்ற கோரிக்கை விடுக்கவும் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## காணாமல்

பகுதியில் கரை ஒதுங்கின.

மனுவல் அன்ரன் உருத்திரா (வயது 44), விக்ரர் அன்ரனி லோறன்ஸ் (வயது 34) ஆகியோரே காணாமற்போய் சடலமாக மீட்கப்பட்டுள்ளவர்களாவர். இவர்கள் இருவரும் குருநகர் பகுதியைச் சேர்ந்தோராகும்.

இச்சம்பவத்தில் மூவர் ஒரேபடகில் சென்ற சமயம் சிறிலங்கா கடற்படையினரின் பீரங்கிப் படகின் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகி இவர்கள் சென்ற படகு அந்த இடத்திலேயே மூழ்கிப்போனது இதைத் தொடர்ந்து மூவரில் ஒருவர் விலாவில் காயத்துடன் நீந்திக் கரைசேர்ந்திருந்தார். (88),(சி),(21)

## பீரங்கித்

படையினர் தாக்கியதில் பத்துக்கு மேற்பட்ட வீடுகள் சிறு சிறு சேதங்களுக்கு இலக்காகியுள்ளன.

நேற்று முன்தினம் இரவு 8 30 மணிமுதல் நேற்று காலை 6.00 மணிவரை விட்டு விட்டு நடாத்திய தாக்குதலில் இச்சேதங்கள் ஏற்பட்டன. கடலில் தொழில் செய்த மீனவர்களும் இத் தாக்குதலையடுத்து கரைக்கு வந்து சேர்ந்தனர். வியாபாரி மூலையில் விழுந்த குண்டு ஒன்றுக்கு மகாதேவா என்பவரது வீட்டுக்கூரைப்பகுதி சேதமடைந்தது. (யோ)

# இனப்பிரச்சினை விரைவில் தீர்த்து வைக்கப்படும்

### பிரதமர் சந்திரிகா தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு பிரச்சினையை இயன்ற அளவு விரைவில் தீர்த்து வைக்க அரசாங்கம் ஆகக்கூடிய முன்னுரிமை அளித்திருப்பதாக சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் சுகததாச விளையாட்டரங்கில் முஸ்லிம்கள் நடத்திய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சவாலில் வெற்றி பெற்றால் சகல மக்கள் பிரிவினரும் ஜனநாயக சுதந்திரத்தினைப் பாவிக்க முடியும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை காண்பது பொதுஜன ஐக்கிய முன்னணியின்தேர்தல்வாக்குறுதி இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுத்துள்ளது என்றும் பிரதமர் சந்திரிகா மேலும் கூறினார்.

## சூரியகந்த கொலைகள் அடுத்தவாரம் விசாரணை

(கொழும்பு)

சூரியகந்த கொலைகள் சம்பந்தமான விசாரணைகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளன.

கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்களை மீண்டும் தோண்டியெடுக்கச் செய்வதற்கான உத்தரவும் எம்பிலிப்பிட்டிய நீதவானிடமிருந்து பெறப்படவுள்ளது.

எம்பிலிட்பிட்டியசட்ட வைத்திய அதிகாரி, இரசாயனப் பகுப்பாய்வாளர், கைரேகைகள் பதிவாளர், பொலிசார் ஆகியோர் முன்னிலையில் சடலங்கள் தோண்டியெடுக்கப்படும் என்று சட்டமா அதிபர் ஷிப்லி அசீஸ் தெரிவித்துள்ளார்.

குற்றவியல் சார்ந்த வைத்தியத்துறை நிபுணர்களினதும் சட்டவைத்திய அதிகாரியினதும் அவதானிப்புக்களை அடிப்படையாக வைத்து. சி. ஐ டி பகுதியினர் விசாரணைகளை மேற்கொள்வர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு-கிழக்கு

வித்துள்ளார்.

யுத்தத்தினால் அழிந்தபகுதிகளை விரைவில் கட்டியெழுப்புவதும் இவ் அமைச்சர்கள் உபகுழுவின்நோக்க மென்றும்இதற்கு கணிசமான வெளிநாட்டு உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்,

அமைச்சரவை நிறைவேற்றிய தீர்மானங்கள்பற்றி அவர் மேலும் கூறுகையில்; யாழ்-குடாநாட்டிலும் கிழக்குப் பகுதியிலும் சில இடங்களுக்கு மின்சார வசதிகள் ஏறபடுத்திக் கொடுக்கப்படும் என்றும் யாழ். ஆஸ்பத்திரிக்கு முதலில் மின் சாரவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். வடபகுதிக்கு மின்சாரத்தை கொண்டுசெல்லும் செட்டிகுளம் பிரதான கோபுரம் திருத்தப்படும் வரையில் சுன்னாகம் மின்நிலையம் திருத்தப்பட்டு அதன் மூலம் மின்சாரம் வழங்கப்படும் என்றும் திருத்தத்திற்குத் தேவையான நிதி உதவி வெளிநாடுகளிலிருந்து பெறப்படும். தேவையான உதிரிப் பாகங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவை விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனவும் மேலும் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டிற்கான பாதையொன்றை திறப்பதற்கு வேண்டுமானால் ஆனையிறவுப் பாதையை திறப்பதற்கும் கூட அரசு தயாராக உள்ளது எனவும் வடபகுதிக்கான தொலைக்காட்சி, வானொலி சேவைகளை அளிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## வடக்கு

ஆக்கபூர்வமாக தீர்க்கமுடியும் என மேலும் அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண புதிய அரசாங்கம்முன் வருமானால் 1948-ம் ஆண்டு நடைமுறையில் இருந்த எட்டு விகித இன விகிதாசார குடியேற்றப் பரம்பலை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் 1977 பின் ஏற்பட்ட திட்டமிட்ட குடியேற்றத்தை அகற்ற வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வள்ளுவர் விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் திருவள்ளுவர் மன்றத்தின் வள்ளுவர் விழா இன்றும் நாளையும் நாளை மறுதினமும் உரும்பராய் சந்திக்கு அருகில் நடைபெறவுள்ளது. இன்று மாலை 5.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன.

## முடிவு திகதி நீடிப்பு

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவால் தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் சிறுகதை; கவிதை, கட்டுரைப் போட்டியின் முடிவுத் திகதி 13-9-94 வரை நீடிக்கப்பட்டுள்ளது என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவினர் அறிவித்துள்ளனர்

## அடுத்த

சந்திரிகாவால் கையொப்பமிடப்பட்ட கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவினூடாக ஓரிரு தினங்களில விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திற்கு அனுப்பிவைக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையை நடத்துவதற்கான பிரதிநிதியை நியமிக்கும்படியும் இக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. அதே வேளை பாதகமான கால நிலை ஆரம்பமாவதற்கு முன்னர் யாழ், குடாநாட்டிற்கு மேலும் உணவுப் பொருள்களை ஆனையிறவு, காங்கேசன்துறை, சங்குப்பிட்டி ஆகிய இடங்களூடாக கொண்டு செல்வதற்கு ஒத்துழைக்குமாறு அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுக்கும் எனவும் ரத்வத்த தெரிவித்தார்.

## 30 லட்சம்

தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த 12 மாதங்களில் மட்டும் 30 லட்சம் பேருக்கு எச் ஐ வி. வைரஸ் தொற்றியிருக்கிறது. ஒருவருடத்திற்கு முன்னர் முழு உலகத்திலும் இந்த வைரஸ் தொற்றியோரின் எண்ணிக்கை 1 கோடி 40 லட்சமாக இருந்தது தற்போது இந்தத் தொகை 1 கோடி 70 லட்சமாக அதிகரித்துள்ளது என அறிவிக்கப்படுகிறது.

# டக்கே அனுப்பும் ஒரு பற்றரி கூட டையின் உயிருக்கு உலைவைக்கும்

## மாத்தறை மாவட்ட ஐ.தே.க. எம்பி

[கொழும்பு]

இன்றைய ஆட்சியாளர்கள் வடக்கிலுள்ளவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டு வருகின்றனர். கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபட்டுள்ளனர். அங்கே அனுப்பப்படும் ஒரு பற்றரியினால் கூட படையினர் ஒருவருக்கு உலைவைக்க முடியும் என்பதை இவர்கள் மறந்துவிட்டனர். எமது ஆட்சியில் ஒரு துண்டு பற்றரியை கூட நாம் வடக்கே அனுப்பவில்லை. அதற்கு இடம் வைக்கவுமில்லை என மாத்தறை மாவட்ட ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினரான லக்ஸ்மன் யாப்பா தெரிவித்துள்ளார்,

ஹக்மனையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் வரும் வரை தான் பாணை விலை குறைத்து கொடுப்பார்கள் அதன் பின் அவர்களால் அப்படிச் செய்ய முடியாது. இதுவெறும் ஏமாற்று வித்தை எனவும் தெரிவித்தார்.

## கடற்படையால் கைதான மீனவர் விடுவிப்பு

பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கடந்த 31ஆம் திகதி கைது செய்யப்பட்ட மீனவர் ஒருவர் காங்கேசன்துறையில் வைத்து விடுவிக்கப்பட்டு நேற்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தார்.

பருத்திததுறை கொட்டடியைச் சேர்ந்த செல்லத்துரை செல்லபாபு (32) என்பவரே விடுவிக்கப் பட்டவராவார்.

இவர் கடற்படையால் கைது செய்யப்பட்டு திருகோணமலை கடற்படை முகாமுக்கு கூட்டிச் செல்லப்பட்டு பின்னர் காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டார். இவரின் உடல் முழுவதும் கம்பியாலும் கயிற்றினால் அடித்த அடிகாயங்கள் நிறைந்து காணப்பட்டன. (யோ)

## லொறி மோதி வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் லொறி மோதியதில் வயோதிபர் ஒருவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

மேற்படி சம்பவத்தின் போது பலியானவர் நெல்லியடியைச் சேர்ந்த கே. நடராசா (வயது 69) என்பவரென தெரியவருகின்றது. (சி)

## இரண்டு தலையுடன் பிறந்த ஆட்டுக்குட்டி



-- படப்பிடிப்பு பொ. இராசேஸ்வரன்

(தென்மராட்சி)

தென்மராட்சி மந்துவில் பகுதியில் ஆடு ஒன்று இரண்டு தலையுடன் குட்டி ஈன்றது கருணாபுரம் மந்துவில் கிழக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த இளையவி குஞ்சையா என்பவரது வீட்டில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம் பெற்றது. ஈன்ற குட்டிக்கு இருதலைகளும், நான்கு கண்களும், இருசெவிகளும் காணப்பட்டன. எனினும் ஆடும் ஆட்டியும் சுகமாக உயிர் வாழ்ந்துவருகின்றன. இதனை பெரும் திரளான பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (86)

## கல்யாண சுந்தரம் - கண்ணதாசன் இன்று பாடலில் பட்டிமன்றம்

இன்று 9-9-1994 கோண்டாவில் குமரக்கோட்டம் ஸ்ரீ ஞானஸ்வரவர் மணவாள கோலம். பகல் சங்காபிஷேக ஆராதனைகள் 8.00 மணி தொடக்கம் நடைபெறும். அதைத் தொடர்ந்து சிவநெறித் தொண்டர் திரு, செ, சத்தியமூர்த்தி ஆசிரியர் விநாயக சதுர்த்தி மகிமை எனும் பொருள்பற்றி சமய சொற்பொழிவு நடத்துவார், இரவு சுவாமி மலர் தண்டிகையில் வீதி உலாவரும். இரவு 9.00 மணிக்கு எவர் பாடலில் தத்துவ அர்த்தம் மேலோங்கி நிற்கிறது கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கவிஞர் கண்ணதாசன் என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெறும்,

நடுவராக பொன். கணேசமூர்த்தி கடமையாற்றுவார். கண்ணதாசன் சார்பில்:- M. S தயாளன் B,A, எஸ். கணேசலிங்கம் B. A, செ. கணேசலிங்கம் ஆசிரியர், வாமன் ஆசிரியர், பட்டுக்கோட்டை சார்பில்:- பொன். மதிமுகராஜா J, p, செ, சத்திய மூர்த்தி ஆசிரியர், பிறிட்டோ ஆசிரியர், பசுபதி ஆசிரியர் ஆகியோர் வாதிட இருக்கிறார்கள. இப்பட்டி மன்றம் புரட்சிகரமானதும் புதுமையானதும் என்று பட்டி மன்ற அமைப்பாளர் பொன், மதிமுகராஜா தெரிவித்தார்

(சி-10297)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994.09,09

வெள்ளி இரவு

8.01 - கலைமஞ்சரி முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது ''அறிவியல் சிந்தனை அலைகள்'' என்னும் நூல். அதனையடுத்து சிறுகதை ''பற்று'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை- ''இன்றைய தேதி உங்களுக்கானது''
8 25 - கணப்பொழுது
8 30 - செய்திகள்
8 40 - அரசியல்அரங்கம்- 'களிறும் கட்டெறும்பும''
8.50 - வாத்தியகானங்கள்

1994.09.10

சனி காலை

7.02 -மாவீரவணக்கம்
7.15 - நீங்கள் கேட்டவை
7 30 .செய்திகள்
7 35 -பத்திரிகைச் செய்திகள்
7 40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### கந்தர்மடம் ஆத்திசூடி வீதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகம்

09-09-94 இன்று 24-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜை நடைபெறும்.

மாலை 4 மணிக்கு விசேட பூஜையும் பிள்ளையாரின் திருஊஞ்சல் பாடல் நடைபெறும். இதனைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் விசேட மங்கள வாத்தியம் முழங்க தெருவீதி வலம் வருவார்.

அத்தருணம் அடியார்கள் விழாவில் கலந்து விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம் இதனைத் தொடர்ந்து வீதி உலா வரும்-

விசேட மங்கள வாத்தியமாக

| நாதஸ்வரம் | தவில் |
| --- | --- |
| N. K கணேசன் | N. K. வீராச்சாமி |
| S R. கேதீஸ்வரன் | T. உதயசங்கர் |
| S. சிறிதரன் | S சொர்ணலிங்கம் |
| K பெரியதம்பி | N முருகானந்தம் |

இரவு விசேட நிகழ்ச்சி

இரவு 8.30 மணிக்கு விசேட நிகழ்ச்சியாக சின்னமணி குழுவினரின் (கணபதிப்பிள்ளை) வில்லிசை நடைபெறும்.

பொருள்: ''தும்பியும் தம்பியும்''

திருவிழா உபயகாரர்

(சி-10303)

இளங்கவிஞர்களுக்கான
இரு திங்கள் ஏடு

கவிதை

(ஆவணி - புரட்டாதி)
விற்பனையாகிறது
விலை: ரூபா 15/-
(9333)

★★ மேற்கு ஐரோப்பாவைக் கைப்பற்ற சோவியத் ஒன்றியம் தீட்டிய இரகசியத் திட்டம் அம்பலம் !!!

★★ மூன்றாம் உலகப் போரிற்கான அந்தரங்கத் தயாரிப்பு !!

என்ன? நம்பமுடியவில்லையா? அதிர்ச்சியாகவுள்ளதா?

செப்ரெம்பர் மாத உலக உலாவைப் படியுங்கள் உண்மை புரியும்.

★ புற்றுநோயைத்தடுக்க, புதிய இலகுவான வழிகள்
★ எழுச்சி குன்றிய கூர்க்காக்கள்
★ தென்கிழக்காசியாவின் இராணுவ பலம்
★ இந்தியாவின் கடல் வலிமை
★ 21-ம் நூற்றாண்டின் நவீன தகவல் தொடர்புகள்
★ கோப்பியின் வரலாறு
★ வெற்றியின் இரகசிய மொழி
★ ஆசியாவின் அணு உலைகள்
★ நாயின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆகிய அரிய கட்டுரைகளுடன் இன்னும் பல் சுவை அம்சங்களைத் தாங்கி இம்மாத

உலக உலா

வெளிவந்துள்ளது

★ யாழ் மாவட்டத்தின் சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

(சி-10301)

யாழ். ஸ்ரீதரில்
தினசரி காலை 10.30, மாலை 6.00
WAY OF THE DRAGON
[கராட்டி]

சனி, ஞாயிறு தினங்களில்
பி.ப 2.15 மணிக்கு மட்டும்
SOCCER WORLD CUP . 1994
BRAZIL VS ITALY - FINAL
உலகக்கிண்ண உதைபந்தாட்டம் - 1994
பிரேசில் எதிர் - இத்தாலி இறுதி ஆட்டம்

தினசரி மாலை 4-00 மணிக்கு மட்டும்
CIRCUS
இதனுடன்
BIG BOSS படத்திலிருந்து புறூஸ்லீயின் குங்ஃபூ சண்டைக் காட்சிகளும்,
RAMBO படத்திலிருந்து சில்வெஸ்டர் ஸ்டலோனின் சாகசக் காட்சிகளும் காண்பிக்கப்படும்.

ஃ பாடசாலையூடாக மாணவர்கள் தொடர்புகொண்டால் காட்சிநேர கட்டண சலுகைகள் வழங்கப்படும்.
(சி-10230)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது